448


சித்ரபாநு ஸு
சித்திரை-வைகாசிமீ

ஸம்புடம் - 1
ஸஞ்சிகை - 5


ஸ்ரீ:

# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

(ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை)

19 JUN 1942
MADRAS

ஸம்பாதகர்: ஸ்ரீ. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர்


: பிரசுரிக்குமிடம் :

இராமசாமி தெரு, தியாகராயநகர்,

மதராஸ்

May, 1942
Vol. 1, No. 5

ரூபா


JL
Q22ணா211/N41
N42.1.5
210103

ஸ்ரீ:

# விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அர்ச்சாவதார வைபவம் | 147 |
| 2. | உபநிஷத் பகுதி | 155 |
| 3. | தேவாலய தர்மம் | 161 |
| 4. | இராம வேழம் | 167 |
| 5. | ஸ்ரீ அழகியசிங்கர் விஜய விம்சதி | 173 |
| 6. | செய்திகள் | 176 |
| 7. | ஸம்பாதகரின் குறிப்புக்கள் | 181 |


ஸ்ரீ.

## வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. ஐந்து அல்லது ஆறு பக்கங்களுக்கு அதிகப்படாமல் அச்சுப் பதிப்பிக்கும்படியாக வ்யாஸங்களைச் சுருக்கி எழுத வேண்டுமென்றும், நல்ல காகிதத்தில் தெளிவாக ஒரே பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறோம்.

2. ஏற்றுக் கொள்ளப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்பட்டிருக்கும் பக்ஷத்தில், உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வாங்கள் மஹத்தான க்ருபையுடன், வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வாங்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா


| ஸம்புடம் 1 | சித்திரபானு ௵<br>சித்திரை - வைகாசி ௴ | ஸஞ்சிகை 5 |
|---|---|---|


"அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥"

1 9 JUN 194
MADRA

## ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரிகை]

## ஸ்ரீ அழகியசிங்கரின் ஆஶாஸந அநுஶாஸநங்கள்.

ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஶ்ரீந்ருஸிம்ஹகாருண்யோத்திதா ।
ஶ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# அர்ச்சாவதார வைபவம்

[ஸஞ்சிகை 4 : பக்கம் - 113 தொடர்ச்சி]

பாரமேஸ்வரத்தில், 'விஶேஷேண ஸ்வயம்வ்யக்தே திவ்யே ஸைத்தே ச வார்ஷகே | மாநுஷகே' இத்யாதிகளாலே அர்ச்சாவதாரத்தில் ஸ்வயம் வ்யக்தாதி பேதங்களும், அந்தந்த க்ஷேத்ரங்களுடைய எல்லைகளின் ஏற்றச் சுருக்கங்களும் வ்யக்தமாகச் சொல்லப் பட்டன. பக்தியின் ப்ரகாரங்களைச் சொல்லவந்த ருஷிகளும்,

'மத்பக்தஜநவாத்ஸல்யம் பூஜாயாம் சாநுமோதநம் |
மத்கதாஶ்ரவணே பக்தி: ஸ்வரநேத்ராங்கவிக்ரியா ||
ஸ்வயமப்யர்சநே யத்நோ மதர்தே டம்பவர்ஜநம் |
மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி ||
பக்திரஷ்டவிதா ஹ்யேஷா ............'

என்றும்,

'ஶ்ரவணம் கீர்த்தநம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவநம் |
அர்ச்சநம் வந்தநம் தாஸ்யம் ஸக்யமாத்மநிவேதநம் ||
இதி பும்ஸார்பிதா விஷ்ணௌ பக்திஶ்சேந்நவலக்ஷணா'

என்றும் அர்ச்சாரூபியான பகவானுடைய ஆராதநார்ச்சநாநுமோதநாதிகளையும் பக்தி பேதமாகச் சொன்னார்கள். அர்ச்சாரூபியான விஷ்ணுவின் ஆராதநம் ஸந்த்யாதிகளைப்போல் நித்யமென்றும், இவ்வர்ச்சா ரூபியான பகவானும் இவன் ஆராதநமும் இல்லாத க்ருஹ ஸ்வாமியின் அபக்வாந்ந போஜநமும் அபக்ஷ்யஸமமென்றும்,

'ந விஷ்ண்வாராதநாத் புண்யம் வித்யதே கர்ம வைதிகம் |
தஸ்மாதநாதிமத்யாந்தம் நித்யமாராதயேத்தரிம் ||
கேஶவார்ச்சா க்ருஹே யஸ்ய ந திஷ்டதி மஹீபதே |
தஸ்யாந்நம் நைவ போக்தவ்யமபக்ஷ்யேண ஸமம் ஹி தத் ||'

இத்யாதி வ்யாஸஸ்ம்ருதி பாரதாதி வசநங்களில் ப்ரஸித்தம். இங்கு 'தஸ்யாந்நம்' என்று எடுத்த அந்நம் பக்வாபக்வ ஸாதாரணம். ஆகையாலேயிறே 'ஶுத்தஸ்ய பக்வாந்நம்' என்று சில இடங்களில் விஶேஷிக்கிறது என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தார். ஸாளக்ராம ரூபார்ச்சை

யின் பாதோதக ஸ்நாநீயாதி நிஷேவணமும், ஸாளக்ராம நிவேதிதாந்ந போஜநமும் ப்ரஹ்மஹத்யாதி பாப நிவர்த்தகமென்றும் ப்ரஹ்மஜ்ஞாந ப்ரதமென்றும், ஸாளக்ராமம் த்வாரகாசக்ரம் இவைகள் சேர்ந்துள்ள இடத்தில் பகவத்ஸாந்நித்யம் அதிகமென்றும்,

'வாஜொஃகஂ விபெஷி தூ஧ஂ வகூ்ராஂகிதஶிறா் ஹரெஃ |
லூக்ஷாலயதி தசெ்தாயஂ ஸ்ரூஹஹத்௱ாதிவாதகழ ||
பஹுவகூ்ரஸஊயுக்தஂ உாரகாவுரவாஸிநஂ |
ஹூாவயிக்வா தூ தசெ்தாயஂ விவநு ஜ்ஞாநவோவூயாக |
ஸாஜ்ஜ்ராமஶிறா யத்ர யத்ர உாரவதீ ஶிறா |
உஹயொமெஂஜநஂ யத்ர தத்ர ஸஂநிஹிதொ ஹரிஃ ||
ஹக்௱ா ஹஜஂஹூ நெவெஒ஧ஂ ஸாஜ்ஜ்ராமஶிறாவிடுதழ |
ஸவஂ யஜூஸஹஹ்ராணாஂ வராகாநாஂ ஶதஂ லஹெக ||'

இத்யாதிகளில் ஸுப்ரஸித்தம். இப்படி ஸாளக்ராமாதி ரூபியாய் க்ரஹங்கள் தோறும் ஸந்நிஹிதனான பகவானுடைய ஆராதந ஸௌலப் யத்தை

'காரெ஧ு ஸஂதி வத்ராணி நஊ஧ஂ ஹூாஊஊகாநி வ |
ஸஂதி ஹஜூள வ வாஊள வ கிஊு நாராய஧தெ ஹரிஃ ||
கந்஧ூஊணுாஊவாஂ காஂஹாஊநூ஧ூாஊாவநெஜநாக |
கந்஧க காஶஸஂயூூாஊவெஹூதி ஜநாஊுநஃ ||

வதெ்ஷு வுஷேூஷு ஹமெஷு தொயெஷ்வகீரதஸஹெ஧ஷு ஸமெதவ ஸூ | ஹக்த்஧கஸெ஧ வுரூஷெ வுராணெ ஊுமெத்த஧ கிஊயுஂ க்ரியதெ நயதூஃ ||'

'வத்ரஂ வுஷஂ ஹஸஂ தொயஂ யொ மெ ஹக்௱ா ரூயஜூதி |
தஊஹஂ ஹக்௱ுவஹ்ரதமஶூாமி ரூயதாதூநஃ ||'

இத்யாதி பகவத் வாக்யங்களிலும் மஹர்ஷி வாக்யங்களிலும் கண்டு கொள்வது. பகவானுடைய ஸௌலப்யத்திற்கு அர்ச்சாவதாரமே எல்லை நிலமென்பதை,

'கூஷாஂதெ ஶுணராஶிவஊுணவரீவாஹாதூநாஂ ஜநூநாஂ ஸஂவ஧ாஹளமிகெதநெஷ்வவி காடிகாஂஜெஷு ரஜூஶூர | கவடு஧ ஹூவடுஸஹிஷ்ணுரவடுகவராயீநாவிறாதூஷ்ஸிதிஃ வீரணீஷெ ஹ்ரஊயா வுஹிஹூவததஶ்ஸீறாஜ்ஜஹிஹூயதெ ||'

என்கிற ஶ்லோகத்தில் பட்டர் அருளிச்செய்தார். ஶுணராஶிவ ஊூ஧ாதி - வேதத்திற்கும் அளவிடக்கூடாததாய், வாங்மநஸா பரிச்சேத் யங்களுமான உன் கல்யாணகுணங்களுடைய ஸங்க்யைபோல் ஆலயங்

MADRAS 18 JUN 19

களுக்கும் ஸௌதங்களோடும் குடீரங்களோடும் வாசியற ஸாந்நித்யம் பண்ணியிருக்கும் அக்கல்யாணகுணங்களின் ஸங்க்யையும் அபரிச்சிந்நமா யன்றோ இருப்பது? இப்படி தேச விசேஷ வைஷம்யம் அற எங்கும் ஸந்நிஹிதனாய் இருக்கும் அளவன்றிக்கே (ஸர்வ:) 'ப்ராஹ்மணா: க்ஷத்ரியா வைஸ்யா: ஸூத்ராஸ்ச க்ருதலக்ஷணா: | ஸர்வநீயஸ்ச ஸேவ்யஸ்ச நித்யயுக்தைர் முமுக்ஷுபி: ||' என்கிறபடி உத்கர்ஷ நிகர்ஷமற ஸர்வஸம்ஸாரிகளுக்கும் அதிகாராநுகுணமாய் ஆராத்யனாயன் றோ நீ இருப்பது! ஸம்ஸாரிகள் ஆராதிப்பதாய் எண்ணி அபராதத்தை யன்றோ பண்ணுகிறதென்னில்: (ஸர்வஸஹிஷ்ணு:) அவற்றை யடையப் பொறுத்துக்கொண்டு நிற்கிறாய். ஆனாலும் ஸம்ஸாரிகள் 'ஆராதிக் கிறோம்' என்றிருக்க, நான் அபராதத்தை ஸஹிப்பதாய் எண்ணியிருந் தால் இருவருக்கும் நினைவு இரண்டாயன்றோ இருப்பதென்னில்: 1. (ஸர்வஸ்வாமீநாவிர்பூதபூதி:) நமக்கு ஒரு நினைவும் அவர் களுக்கு ஒரு நினைவுமாகிலன்றோ சேராச் சேர்த்தியாவது என்று அவர் களுக் கீடாகத் தன்னை அமைத்தன்றோ நீ நிற்பது? 'யே யதா மாம் ப்ரபத்யந்தே', 'தமருகந்ததெவ்வுருவமவ்வுருவம்' என்னக்கடவதிறே! அன்றிக்கே 2. (ஸர்வஸ்வாமீநாவிர்பூதபூதி:) ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்த வஸ்துக்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளெல் லாம் ஸ்வாதீநமாம்படி இருக்கிறவன். தன்னுடைய ஸ்வரூப ஸ்தித்யாதி களுடைய ஆஸ்ரிதாதீநமாம்படியாய்ச் செய்து உபயவிபூதிநாதனான நீ அவர்கட்கு க்ருஹக்ஷேத்ராதிகள்போல் கூறு கொள்ளலாம்படியன்றோ நீ நிற்பது! 3. ஸம்ஸாரியான இவனுக்கு ருசி பிறந்தபோது மற்றொரு இடம் தேடிப் போக வேண்டாதே இவன் இருந்த க்ருஹத்திலேயே அநுபவிக்கலாம்படியன்றோ நீ இருப்பது! 4: இவன் அந்யமநஸ்கனாய் இருந்தவனன்று; இவன் கையைப் பார்த்திருக்கக்கடவனாய், இவனுக்குப் பசி உண்டானபோது இவன் புஜிக்கும் த்ரவ்யத்தை அமுதுசெய்ய வேண்டுமென்று அபேக்ஷித்தால் அப்போதே அமுது செய்யக்கடவனாய், ஆஸந ஸயந பூஷணாதிகளெல்லாம் இவனிட்ட வழக்காக்கி ஸ்ரிய:பதி யாய் அவாப்தஸமஸ்தகாமனான நீ ஆஸ்ரித பராதீநனாய்ப் பக்தனுடைய த்ரவ்யத்தையன்றோ அபேக்ஷித்திருப்பது! இப்படி ஸ்வதந்த்ரன் பரதந் த்ரனாய் நின்றால் வைரஸ்யமுண்டாகாதோ வென்னில்: (வீரணீஷே) திருவாய்ப்பாடியில் யஸோதாதிகளுக்குப் பரதந்த்ரனாய், அவர்களிட்ட வெண்ணெயை உண்டு ப்ரீதனானபடியன்றோ நீ ஆஸ்ரித விஷயத்தில் ப்ரீதி பண்ணுவது! (ஹ்ருதயாஹ்லாதிநிதி) இப்படிப்பட்ட உன் ஸௌஸீல் யாதிகளை அநுஸந்தித்து 'என் சொல்லி மறப்பனோ?' என்று ஆழ்வார் களும் திகைத்து நின்றார்களிறே.

ஆளவந்தாரும் ஸௌஸீல்யாதிஸயத்தாலே பெரிய பெருமாளைக் கிட்டி ஸ்தோத்ரம் பண்ணப் புகுந்து,

'நமோ நமோ வாங்மநஸாதிபூமயே நமோ நமோ வாங்மநஸைகபூமயே |
நமோ நமோऽநந்தமஹாவிபூதயே நமோ நமோऽநந்ததயைகஸிந்தவே ||''

என்று ஶரணவரணம் பண்ண, எம்பெருமானும் 'ஓய் ஆளவந்தாரே! என்ன நம்மைக் கிட்டி வெகு அபிநயம் பண்ணுகிறீர்? நம்மை அடைவதற்கு, நாம் கீதையில் சொன்ன கர்மயோகாதிகள் கைப்புகுந்தனவோ?' என்ன, இருவரும்,

'நதர்மநிஷ்டோऽஸ்மி நசாத்மவேதீ ந பக்திமாம்ஸ்த்வச்சரணாரவிந்தே |
அகிஞ்சநோऽநந்யகதிஶ்ஶரண்ய த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே ||'

'கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோக ரூபமான கைமுதலும் புருஷார்த்த லாபத்திற்கு வேறு மதியுமில்லாத அடியேன், தேவரீர்களுடைய திருவடிகளையே ஶரணமாக அடைகிறேன்' என்ன, அதைக் கேட்டு பகவானும்: நம்மை அடைவதற்கு உபாயமாக நாம் சொன்ன கைமுதல் இல்லாவிடினும் 'அவஶ்யமேவ விமர்ஶநீயோ மார்க:' என்கிறபடி தோஷமற்றுவது இருக்கிறீரோ?' வென்ன, இவரும்: 'ஸர்வஜ்ஞனிடத்தில் நாம் பொய்சொல்ல அடுக்குமோ?

'ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே ஸஹஸ்ரஶோ யந்ந மயா வ்யதாயி |
ஸோऽஹம் விபாகாவஸரே முகுந்த க்ரந்தாமி ஸம்ப்ரத்யகதிஸ்தவாக்ரே ||'

லோகத்தில் நிந்திதமாகச் சொல்லப்பட்ட கர்மங்களில் அடியேன் ஆயிரம்தரம் அநுஷ்டிக்காதது ஒன்றுமில்லை; அக்கர்மங்களில் புண்ணியங்களின் பரிபாகத்தால் உன் முன்னே நிற்கப்பெற்று பாபங்களின் பரிபாகத்தால் கூப்பிடுகிறேன்' என்ன, பகவானும்: 'இப்படிஒரு உபாயமும் இல்லாமல் பாபாநுஷ்டாந ப்ரவணருமானநீர் இத்தனை நாளாகவும் ஸர்வ வ்யாப்தனான என்னைக் கிட்டிற்றில்லையோ? புண்யபரிபாகத்தால் இப்பொழுது வந்த விஶேஷம் என்?' என்ன, இவரும்:

'நிமஜ்ஜதோऽநந்த பவார்ணவாந்தஶ்சிராய மே கூலமிவாஸி லப்த:'

'இத்தனை நாளும் ஸர்வ வ்யாப்தனுப் ஸர்வ ஶேஷியுமான தேவரீருடைய ஸம்பந்தத்தை ஆகாஶாதிகளின் ஸம்பந்தோபாதியன்றோ அடியேன் நினைத்திருந்தது! இப்போதன்றோ முடிவில்லாத ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கியிருந்த அடியேனுக்குக் கரைபோல் ஶேஷியாய் நீர் தென்பட்டது' என்ன, பகவானும்: 'ஓய்! இது உமக்கு அலப்யலாபமே. உம்மை ரக்ஷிக்கும்படி எனக்கு வந்த லாபமென்? உம்மை ரக்ஷித்தால் உலகமெல்லாவற்றையும் ரக்ஷிக்க நேராதோ?' என்ன, இவரும்:

'த்வயாபி லப்தம் பகவந்நிதாநீமநுத்தமம் பாத்ரமிதம் தயாயா:'

'உம்முடைய லாபத்தை என்னைக் கேட்டு அறியவேண்டுமோ? பகவானான உமக்குத் தெரியாதோ? உம்முடைய தயைக்கு 'சன்ம சன்மாந்தரங் காத்து', 'எதிர்சூழல் புக்கு' என்கிறபடி கல்பகோடி காலமாய் ப்ரதீக்ஷித்துங் கிட்டாத ஸர்வோத்தமமான பாத்ரம் இன்றைக்கன்றோ கிட்டிற்று! த்வயநீயரில் உலகத்தார் எனக்கு ஸமமாவரோ?' என்ன, பகவானும்: 'ஓய்! இதென்ன? ஸர்வஜ்ஞனையும் முக்தனைப்போல் வஞ்சிக்கப் பார்க்கிறீர்! நாம் ரக்ஷிக்காவிடில் உமக்கன்றோ அநர்த்தம் வருவது? நமக்கு வந்த ஹாநி என்?' என்ன, இவரும்:

'𑌸𑌹𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍇𑌵𑌂 𑌇𑌹𑌾𑌪𑌿 𑌕𑌿𑌂𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌂𑌸𑌹𑍇 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌸𑌹𑌜𑌂 𑌹𑌿 𑌦𑍁𑌃𑌖𑌮𑍍 ।
𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 𑌕𑍍𑌷𑌮𑍇𑌤 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑌰𑌾𑌭𑌵𑍋 𑌨𑌾𑌥 𑌨 𑌤𑍇𑌽𑌨𑍁𑌰𑍂𑌪𑌃 ॥'

'அநாதிகாலமாய் அந்தாதியாய் ஸம்ஸரித்துப்போந்த அடியேனுக்கு, இதற்கு முன் உண்டாகாத துக்கம் இனி என்ன உண்டாகப்போகிறது? ஸஹஜ துக்கியான அடியேன் ஸர்வத்தையும் ஸஹிக்க ஸித்தன். ஆனால் கஜேந்த்ர த்ரௌபத்யாதிகளைப்போல் புறம்பயன்றிக்கே உம்முடைய முன்னே வந்து நின்று ஶரணமடைந்தவர்களுக்கு உம்மிடத்தினின்றே பரிபவமுண்டானால், அது ஸர்வஶேஷியாய், '𑌨 𑌤𑍍𑌯𑌜𑍇𑌯𑌂 𑌕𑌥𑌞𑍍𑌚𑌨' '𑌏𑌤𑌦𑍍𑌵𑍍𑌰𑌤𑌂 𑌮𑌮' என்று சொன்ன உமக்கு அநுரூபம் அன்றே என்பதே அடியேனுக்கு அஸஹ்யமும் அபூர்வமுமான க்லேஶம்' என்ன, பகவானும்: 'ஓய்! இதென்ன வாக்சாதுர்யம்!! நம்மை ஸ்வதந்த்ரனை ஸர்வேஸ்வரனாக அறியீரோ! ஸத்யஸங்கல்பனான நாம் ஸர்வ வ்ரதத்தையும் விட்டாவது இப்படி வஞ்சநோக்திகளைச் சொல்லும் உம்மை நிரஸிக்கவே எண்ணுகிறோம். உம்முடைய நிமித்தமாக இப்பரிபவம் அநுபாவ்யமே' என்ன, இவரும்:

'𑌨𑌿𑌰𑌾𑌸𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌨 𑌤𑌾𑌵𑌦𑍁𑌤𑍍𑌸𑌹𑍇 𑌮𑌹𑍇𑌶 𑌹𑌾𑌤𑍁𑌂 𑌤𑌵 𑌪𑌾𑌦𑌪𑌙𑍍𑌕𑌜𑌮𑍍'

'ஈஶிதாவான தேவரீர் உமது ஸங்கல்பத்தை விட்டு என்னை நிரஸிக்கத் துணிந்தாலும், இனி அடியேன் உமது திருவடித்தாமரைகளை விடுகிறதில்லை' என்ன, பகவானும்: 'லஜ்ஜையைத் துறந்தீரோ?' என்ன, இவரும்:

'𑌰𑍁𑌷𑌾 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌶𑌿𑌶𑍁𑌃 𑌸𑍍𑌤𑌨𑌨𑍍𑌧𑌯𑍋
𑌨 𑌜𑌾𑌤𑍁 𑌮𑌾𑌤𑍁𑌶𑍍𑌚𑌰𑌣𑍌 𑌜𑌿𑌹𑌾𑌸𑌤𑌿'

'தாய் கோபத்துடன் அடித்துத் தள்ளினாலும் ஸ்தந்யபானம் பண்ணி அதில் ருசியறிந்த குழந்தை மறுபடி அவள் காலையே யன்றோ கட்டுவது? இதில் லஜ்ஜை என்?' என்ன, பகவானும்: 'இவ்வளவு நிர்ப்பந்தமென்? நீர் வேறொன்றை அடைந்தாலாகாதோ?' என்ன, இவரும்:

'𑌤𑌵𑌾𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌿𑌨𑌿 𑌪𑌾𑌦𑌪𑌙𑍍𑌕𑌜𑍇
𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌾 𑌕𑌥𑌮𑌨𑍍𑌯𑌦𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌸𑍍𑌥𑌿𑌤𑍇𑌽𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑍇 𑌮𑌕𑌰𑌨𑍍𑌦𑌨𑌿𑌰𑍍𑌭𑌰𑍇
𑌮𑌧𑍁𑌵𑍍𑌰𑌤𑍋 𑌨𑍇𑌕𑍍𑌷𑍁𑌰𑌕𑌂 𑌹𑌿 𑌵𑍀𑌕𑍍𑌷𑌤𑍇 ॥'

'ஊமத்தம்பூவானாலும், விடாமல் மதுபானம் பண்ணும் வ்ரதமுடைய தான வண்டும், ஸமீபத்தில் தேன் நிறைந்த தாமரைப்பூ இருந்தாலே நீர்முள்ளியைக் கண்ணெடுத்துப் பார்க்காமலிருக்க, உம்தேனே மலரும் திருவடித்தாமரைகளிலே ஸமர்ப்பிதாத்மாவான அடியேன் மறுபடி வேறொன்றை இச்சிப்பேனோ?' என்ன, பகவானும்: 'நம் திருவடிகளின் மாஹாத்ம்யத்தை நீர் உள்ளபடி அறிந்து ஆசைப்படுகிறீரோ?' என்ன, இவரும்:

'𑌤𑍍𑌵𑌦𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌕𑌦𑌾𑌪𑌿 𑌕𑍇𑌨𑌚𑌿-
𑌤𑍍𑌯𑌥𑌾 𑌤𑌥𑌾 𑌵𑌾𑌪𑌿 𑌸𑌕𑍃𑌤𑍍𑌕𑍃𑌤𑍋𑌽𑌞𑍍𑌜𑌲𑌿𑌃 ।
𑌤𑌦𑍈𑌵 𑌮𑍁𑌷𑍍𑌣𑌾𑌤𑍍𑌯𑌶𑍁𑌭𑌾𑌨𑍍𑌯𑌶𑍇𑌷𑌤-
𑌶𑍍𑌶𑍁𑌭𑌾𑌨𑌿 𑌪𑍁𑌷𑍍𑌣𑌾𑌤𑌿 𑌨𑌜𑌾𑌤𑍁 𑌹𑍀𑌯𑌤𑍇 ॥'

என்று (ஸ்தோத்ரபாஷ்யாஞ்சலி வைபவாதிகளில் வ்யாக்யாதமானபடி) திருவடிகளின் மாஹாத்ம்யத்தை விண்ணப்பம் செய்ய, பகவானும் விஸ்மயப்பட்டு இவருடைய விஶ்வாஸத்தை ஶோதிக்க எண்ணி, 'ஓய்! ஆளவந்தாரே! ஸம்ஸாரபேஷஜமாக விதிக்கப்பட்ட நம் பக்தியாகிற கடலுக்கு இவ்வஞ்ஜலி ஹேதுவான அநுராகம் லேஶமாத்ரமன்றோ? இதுவோ உமக்கு ஸம்ஸார நிவர்த்தகமாகப்போகிறது?' என்ன, இவரும்:

'𑌉𑌦𑍀𑌰𑍍𑌣𑌸𑌂𑌸𑌾𑌰𑌦𑌵𑌾𑌶𑍁𑌶𑍁𑌕𑍍𑌷𑌣𑌿𑌂
𑌕𑍍𑌷𑌣𑍇𑌨 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌪𑍍𑌯 𑌪𑌰𑌾𑌂 𑌚 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑌿𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 𑌤𑍍𑌵𑌚𑍍𑌚𑌰𑌣𑌾𑌰𑍁𑌣𑌾𑌮𑍍𑌬𑍁𑌜
𑌦𑍍𑌵𑌯𑌾𑌨𑍁𑌰𑌾𑌗𑌾𑌮𑍃𑌤𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌶𑍀𑌕𑌰𑌃 ॥'

உம் திருவடிகளின் அநுராகத்தின் திவலையும் ஸம்ஸாரமாகிற பெருங் காட்டுத் தீயை ஶீக்ரத்தில் அணைத்து ஸர்வோத்க்ருஷ்டமான ஸுகத்தையும் தரவல்லது' என்ன, பகவானும் போர உகந்து 'இவ்வளவு அநுராகமுள்ள நீர் இனி பலத்தில் ஸம்ஶயமின்றி நிர்வ்ருதராய் இருக்கலாமே' என்ன, இவரும், 'ஓம், ஆனாலும் இவ்வநுராகத்தோடு

'𑌵𑌿𑌲𑌾𑌸𑌵𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌪𑌰𑌾𑌵𑌰𑌾𑌲𑌯𑌂
𑌨𑌮𑌸𑍍𑌯𑌦𑌾𑌰𑍍𑌤𑌿𑌕𑍍𑌷𑌪𑌣𑍇 𑌕𑍃𑌤𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌧𑌨𑌂 𑌮𑌦𑍀𑌯𑌂 𑌤𑌵 𑌪𑌾𑌦𑌪𑌙𑍍𑌕𑌜𑌂
𑌕𑌦𑌾 𑌨𑍁 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌰𑌵𑌾𑌣𑌿 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 ॥'

உம்முடைய லோக விக்ராந்த சரணாம்புஜங்களைக் கண்ணாரக் கண்டு தந்யனாவது என்றுகொலோ !' என்ன, பகவானும் அர்ச்சகரைக்கொண்டு நீராஜநம் செய்வித்துத் தம் திருவடிகளை இவர் கண்ணுக்கு இலக்காக்க, இவரும், [illegible] பரிகர்மிதமாய், [illegible] திருவடிகளைக் கண்டு குளிரச் சேவித்து ஆசை விஞ்சி,

' [illegible] |
[illegible] ||'

'உபயவிபூதி ஸாம்ராஜ்ய ஸிம்ஹாஸனங்களாலே அலங்க்ருதங்களான தேவரீருடைய திருவடித்தாமரைகள் அடியேனுடைய ஶிரஸ்ஸை என்று அலங்கரிக்கப் போகின்றனவோ ?' என்று மேன்மேலும் ப்ரார்த்தித்து ஸ்தோத்ரம் முடிகிறவரையில் ஸாக்ஷாத் ஸல்லாபம்போல் பகவானோடு அர்ச்சா ஸமாதியிலும் ஸல்லபித்தருளினரென்பது ஸ்தோத்ரரத்ந ஹ்ருதயம் அறிந்தவர்கட்கு விஶதம்.

இப்படியே ஸர்வஜ்ஞர்களான ஸ்ரீ பாஷ்யகார தேசிகாதிகளான நம் பூர்வாசார்யர்களும், அபிநவ தஶாவதாரம் போன்ற ஆழ்வார்களும் அர்ச்சாவதார மாஹாத்ம்ய ஸௌலப்யாதிகளை விஶேஷமாக அநுஸந்தித்துப் போந்தார்கள். ஶங்கர பாஷ்யத்திலும்,

' [illegible]
[illegible] '

என்கிற 1 - 2 - 9 வது ப்ரஹ்மஸூத்ர வ்யாக்யாநாவஸரத்தில் '[illegible]' என்று ஆரம்பித்து,

'[illegible] |
[illegible] ||'

என்று ஸாளக்ராமத்தில் பகவத் ஸாந்நித்ய விஶேஷம் சொல்லப்பட்டது.

இப்படியே வைதிக மதஸ்தர்கள் யாவரும் அர்ச்சாவதாரத்தை ஆதரித்து ஆராதித்து ஐஹிகாமுஷ்மிக பலங்களைக் கைக்கொள்ளாநிற்க, இவ்விஷயத்தில் மந்த புண்யர்களாயும் மந்தபுத்திகளாயுமுள்ள அல்பர்களுடைய ஆக்ஷேபம் அவர்களுக்கே அஶ்ரேயஸ்கரமாயும் அவர்களுடைய ஸமாதாநார்த்தமாக அர்ச்சாரூபியான பகவானுடைய வைபவத்தைப் பராமர்ஶம் பண்ணும் நமக்கு ஶ்ரேயஸ்கரமாயும் முடிந்தது.

[illegible] |
[illegible] ||

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# உபநிஷத் பகுதி

[விஷ்ணு தாஸன்]

பரப்ரஹ்மம் ஜகத்திற்கு நிமித்த காரணமாத்ரமன்று; உபாதான காரணமும் அதுவே என்று வேதாந்திகள் சொல்லுகிறார்கள். உபாதான காரணத்தின் லக்ஷணத்தைச் சொல்லும் காலத்தில், எது எது உத்பாத்யமோ [அதாவது, உத்பத்தி செய்யப்படத் தகுந்தவையோ] அதெல்லாம் உபாதேயம் 'எது எது கார்யமாகப் பரிணமிக்கும் தன்மையை உடையதோ அதெல்லாம் உபாதானம்' என்பவை முதலான விவரணங்களைக் கைவிட்டு, பூர்வாவஸ்தாவத்தாக இருப்பதுடன் காரணமென்று ப்ரமாணங்களால் ஸித்திப்பதெல்லாம் உபாதானமென்றும், பாவ்யவஸ்தாவத்தெல்லாம் உபாதேயமென்றும் லக்ஷணங்களைப் பரிஷ்கரிக்கிறார்கள். இப்படிச் சொல்வதன் அர்த்தத்தைக் கொஞ்சம் விசாரிக்கலாமென்று எண்ணி இந்த வ்யாஸத்தை எழுதத் துணிகின்றேன்.

"யதோ வா இமானி பூதானி ஜாயந்தே-யேந ஜாதானி ஜீவந்தி-யத்ப்ரயந்த்யபிஸம்விசந்தி-தத்விஜிஜ்ஞாஸஸ்வ-தத்ப்ரஹ்ம"

என்னும் ப்ருகுவல்லி ச்ருதியினால் ஜகஜ்ஜன்மாதிகாரணத்வம் ப்ரஹ்மத்தின் லக்ஷணமென்று சொல்லப்படுகின்றது. 'எந்த வஸ்துவானது ஜகத்தின் ஸ்ருஷ்டிக்கும் ஸ்திதிக்கும் ப்ரளயத்திற்கும் காரணமோ அது ப்ரஹ்மம்' என்பது இந்த ச்ருதி வாக்யத்தின் அர்த்தம். இதனால் ப்ரஹ்மத்தின் லக்ஷணம் சொல்லப்பட்டதாகின்றது. "தத்விஜிஜ்ஞாஸஸ்வ" [அதை அறிந்துகொள்] என்று ப்ரஹ்மவிசாரமோ அல்லது ப்ரஹ்மோபாஸநமோ விதிக்கப்படுவதாகவன்றோ இதில் தோன்றுகிறது? ப்ரஹ்மத்தின் லக்ஷணம் இதனால் சொல்லப்படுகின்றது என்று எப்படி சொல்லக் கூடும்? என்றால், விசாராத்மகமான ஜ்ஞானம் ராக ப்ராப்தமாகையால், அது விதேயமாக மாட்டாது. உபாஸநாத்மக ஜ்ஞானமோ "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" [ப்ரஹ்மத்தை உபாஸிக்கிறவன் ப்ரஹ்மத்தை அடைகிறான்] என்று இந்த ப்ரகரணத்திலேயே மற்றொரு வாக்யத்தால் ஸித்தமாகிறபடியால், அது மறுபடியும் விதிக்கப்படுகின்றது என்பதும் ஸங்கதமாகமாட்டாது. ஆகையால், "விஜிஜ்ஞாஸஸ்வ" [அறிந்துகொள்] என்பது விதியன்று; 'ஸாவதாநமாகக் கேள்' என்னும் கருத்தை உடையது என்பதுதான் அந்தச் சங்கைக்கு ஸமாதானம்.

'இதில் மூன்று வாக்யங்கள் தென்படுகின்றனவே! ஒவ்வொன்றும் தனித்தனியான லக்ஷணமா! இல்லாவிட்டால் மூன்றும் சேர்ந்த ஸமு

தாயமே லக்ஷணமா?' என்று மற்றும் ஒரு சங்கை ஜநிக்கக்கூடும். 'எல்லாம் சேர்ந்து ஒரே லக்ஷணம்; இது, "தஜ்ஜலான்" என்று ப்ரதி.வாக்யமும் சொல்லப்படாமலிருப்பதால், விளங்குகின்றது' என்பதே அதற்கு பதில். 'எது ஜகத்தின் உத்பத்திக்குக் காரணமோ அது ப்ரஹ்மம்' என்னும் ஒரு வாக்ய மாத்ரத்தால் ப்ரஹ்மத்தின் லக்ஷணம் ஸித்தித்து விடுகின்றதே; மற்றை வாக்யங்கள் நிஷ்ப்ரயோஜநங்களாக மாட்டாவோ?' என்றால், அப்படி அவை நிஷ்ப்ரயோஜநமாகமாட்டாவென்று ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். 'எது ஜகத்தின் ஸ்ருஷ்டிக்குக் காரணமோ அது ப்ரஹ்மம்' என்று மாத்ரம் சொன்னால், ஒருகால் 'ஸ்திதிலயங்களுக்கு வேறு ஒன்று காரணமோ?' என்று ஒரு ஸந்தேஹம் ஜநிக்கக்கூடும். அம்மாதிரியான விபரீத சங்கையை மற்றை வாக்யங்கள் தடுக்குமாதலால் அவை வ்யர்த்தமாகமாட்டா. ப்ரஹ்மம் என்பது நிரதிசய ப்ருஹத்வத்துடன் கூடியது. உத்பத்திகாரணத்வமோ, ஸ்திதி காரணத்வமோ, லய காரணத்வமோ, இவைகளுள் ஒன்றை மாத்ரம் லக்ஷணமாகச் சொன்னால் மற்றை இரண்டுக்கும் மற்றொரு வஸ்து காரணமோ என்னும் சங்கை ஜநிக்குமாகையால், அந்த மூன்றில் ஒன்றையே லக்ஷணமாக உடைய ப்ரஹ்மத்திற்கு நிரதிசய ப்ருஹத்வம் ஸித்திக்கமாட்டாதன்றோ? ஆகையால், ப்ருஹத்வாதிசயத்தை உடைய ப்ருஹ்மத்திற்கு மூன்றும் சேர்ந்த ஸமுதாய காரணத்வமே பூர்ண லக்ஷணமாகும் என்பது ஸித்தம்.

இவ்விடத்தில் 'காரணம்' என்னும் பதம் தென்படுகின்றதே! அதன் தாத்பர்யம் என்ன? மண்ணாற் செய்யப்பட்ட குடத்திற்கு அதைச் செய்யும் குயவன் எப்படி காரணமாகின்றானோ, அப்படிப்பட்ட காரணம் மாத்ரமா ஜகத்திற்கு ப்ரஹ்மம்? இல்லாவிட்டால், அந்தக் குடத்திற்கு மண் எப்படி காரணமோ, அப்படிப்பட்ட காரணமா? இல்லாவிட்டால் இரண்டுவிதமான காரணமுமா? என்று ஒரு கேள்வி ஜநிக்கலாம். அதாவது, ப்ரஹ்மம் ஜகத்திற்கு நிமித்த காரணம் மாத்ரமா? உபாதாந காரணம் மாத்ரமா? இரண்டுமா? என்பதுதான் கேள்வி. ப்ரஹ்மம் ஜகத்திற்கு இரண்டுவிதமாகவும் காரணமாகின்றது என்றே ச்ருதி சொல்லுகின்றது. சாந்தோக்யத்தில் ஸ்ருஷ்டியை விவரிக்குமிடத்தில், "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" என்று உபக்ரமித்து "ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி। தத்தேஜோऽஸ்ருஜத" என்று ஒரு வாக்யம் இருக்கின்றது. இதன்பொருள்: 'ஸத் என்னும் சப்தத்திற்கு வாச்யமான பரப்ரஹ்மம், தாம் பஹுவாக வேண்டுமென்று ஸங்கல்பித்தது; அப்படி ஸங்கல்பித்து தேஜஸ்ஸை ஸ்ருஷ்டித்தது' என்பதுதான். இதில் 'ஸங்கல்பித்து ஸ்ருஷ்டித்தது' என்பதால் அந்த ஸ்ருஷ்டிக்கு அந்த ப்ரஹ்மம் நிமித்தமென்பதும், 'பஹுவாகக்கடவோம்' என்று தாமே பஹுவாக வேண்டு மென்று இச்சித்ததால் அதுவே உபாதாநமாகின்ற தென்பதும் விளங்குகின்றன. இந்த அர்த்தத்தையே இந்த வாக்யத்

திற்கு முன்னிருக்கும் 'ஸதேவ ஏகமேவ' என்னும் பதங்களும் ஸூசிப்பிக்கின்றன. இதம் - இந்த ஜகத்தானது [பற்பல பெயருடன் பற்பல ரூபங்களுடனும் கூடிய வஸ்துக்களை அடக்கியுள்ள இந்த ஜகத்தானது], அக்ரே - ஸ்ருஷ்டி காலத்திற்கு முன், ஸதேவாஸீத் - ஸத்தாகவே இருந்தது [அஸத்தாக இல்லை]. ஏகமேவ - ஒரே வஸ்துவாகவும், அத்விதீயம் - இரண்டாவது அற்றதாயும் [மற்றொரு அதிஷ்டாதாவற்றதாயும்] இருந்தது. 'ஸதேவ' என்பதிலுள்ள 'ஏவ' என்னும் அவதாரணம் 'ஸ்ருஷ்டிக்கு முன்னும் அது இருந்தது, இராமல் இல்லை' என்பதை உணர்த்துகின்றது. அஸத்திலிருந்து ஸத் உண்டாக மாட்டாது [அதாவது, பூர்வம் இராமலே பிறகு புதிதாக ஒன்றும் உண்டாகாது] என்பது நமது ஸித்தாந்தம். 'ஸ்ருஷ்டிக்கு முன்னிருந்த ஸத் என்பதே ஸ்ருஷ்டிக்குப்பின் தென்படும் ஜகத்' என்று சொல்வதால் அதுவே ஜகத்திற்கு உபாதாந காரணம் என்பது ஸித்தம். பின் வரும் வாக்யமாகிற "ததைக்ஷத" "தத்தேஜோऽஸ்ருஜத" [அது ஸங்கல்பித்தது; தேஜஸ்ஸை ஸ்ருஷ்டித்தது] என்பதிலிருந்து அந்த 'ஸத்' என்னும் சப்தத்தாற் சொல்லப்படும் வஸ்துவே இந்த ஸ்ருஷ்டியைச் செய்கின்றது என்று ஏற்படுகிறபடியால், 'அத்விதீயம்' [இரண்டாவது அற்ற] என்னும் பதம் 'அந்த ஸ்ருஷ்டி வ்யாபாரத்தில் மற்றொரு நிமித்த காரணம் இல்லை; அந்த ஸத் என்பதே நிமித்த காரணம்' என்பதை விளக்குகின்றது. ஆகையால், 'ஏகம்' 'அத்விதீயம்' என்னும் இந்த இரண்டு பதங்களால், 'ஜகத்திற்கு உபாதாந காரணம் ப்ரஹ்மம், நிமித்த காரணமும் அதுவே' என்பது ஸித்தம். இன்னும் இம்மாதிரியே பல ச்ருதிகள் சொல்லுகிறபடியால், நாம் ப்ரஹ்மத்தையே ஜகத்திற்கு ஏக காரணமாக ஒத்துக் கொண்டிருக்கிறோம்.

'லோகத்தில் ஒரே வஸ்து ஒரு கார்யத்திற்கு நிமித்தமாகவும் உபாதானமாகவும் காணப்படவில்லையே. நிமித்தத்வமும் உபாதாநத்வமும் பரஸ்பர விருத்தங்களாகவன்றோ தென்படுகின்றன!' என்று ஒரு ஆக்ஷேபம் வரக்கூடும். ஸ்ரீதேசிகன்,

"நோபாதாநம் நிமித்தம் க்வசித் அபி ததநந்யம் ததந்யத் விது:"

[உபாதாநம் நிமித்தமாகமாட்டாது; அந்த உபாதாநம் நிமித்தத்தைக் காட்டிலும் வேறுபட்டதாக நாம் அறிகிறோமன்றோ?] என்று இந்த ஸங்கையை உத்தாபநம் செய்துகொண்டு, 'ஆகார பேதத்தால் ப்ரஹ்மத்தினிடத்தில் இரண்டுவித காரணங்களும் அமையக்கூடும்' என்று யுக்தியால் பரிஹாரத்தைச் சொல்லிவிட்டு,

"வேதாந்தாஸ்த்வேகமேவ த்விதயம் அபி ஜகுர் விஶ்வஹேதும் ஸ்ருதி: வாக்ய விஜ்ஞாவிவாக:"

[வேதத்தால் ஸித்தமான இந்த விஷயத்தில், தமது இச்சைப்படி லக்ஷணத்தை நயிப்பிக்கிறது என்னும் குமார்க்கமானது பாலர்களாற் செய்யப்படும் விசாரத்தின் பரிபாகமே யாகும்] என்று ஸமாதாநத்தை அநுக்ரஹித்திருக்கிறார். ஶ்ருதி ஸித்தார்த்தத்திற்கு விரோதமாக நாம் செய்யும் ஆக்ஷேபமெல்லாம் வ்ருதா என்பது ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம்.

ஆனால், 'உபாதாநமும் உபாதேயமும் அபிந்நங்களாக இருத்தல் வேண்டுமன்றோ? மண்ணும் குடமும் ஒரே த்ரவ்யமன்றோ? ப்ரஹ்மமும் ப்ரபஞ்சமும் பிந்நங்களாகையால், எப்படி ஒன்றை உபாதாநமென்றும் மற்றொன்றை அதன் உபாதேயமென்றும் சொல்லக்கூடும்?' என்று மற்றுமொரு ஶங்கை உண்டாகலாம். 'அவையிரண்டும் ஒரே த்ரவ்யம்; அவஸ்தையில் மாத்ரம் வேறு.' என்பதே அதற்கு ஸமாதாநம். ப்ரஹ்மத்திற்குக் காரணாவஸ்தை என்றும் கார்யாவஸ்தை என்றும் இரண்டு அவஸ்தைகள் உண்டு. அது ஒரு அவஸ்தையிலிருக்கும் காலத்தில் அதைக் காரண ப்ரஹ்மமென்றும், மற்றொரு அவஸ்தையிலிருக்கும் காலத்தில் அதைக் கார்ய ப்ரஹ்மமென்றும் நாம் வ்யவஹரிக்கிறோமே தவிர்த்து, உண்மையில் அவை இரண்டும் ப்ரஹ்மமே அது எப்படி என்பது பின் செய்யப்படும் விவரத்தால் விளங்கும். நமது ஸித்தாந்தத்தில் ப்ரஹ்மம் என்பது கேவலம் சிந்மாத்ரமன்று; சிற்சில விஶேஷணங்களுடன் கூடியிருக்கும் விஶேஷ்யமே அது; ஆகையால் ப்ரஹ்மத்தினிடத்தில் விஶேஷணாம்சமென்றும் விஶேஷ்யாம்ஶமென்றும் இரண்டு அம்ஶங்களுண்டு. அதனுடைய கல்யாணகுணங்கள் அதற்கு எப்படி விஶேஷணங்களாகின்றனவோ, அப்படியே ஸகல சேதநா சேதந த்ரவ்யங்களும் அதற்கு விஶேஷணங்களாக இருக்கின்றன. அவை எப்படி அந்த ப்ரஹ்மத்தை விட்டுப் பிரிந்து நிற்கமாட்டாவோ அப்படியே இவைகளும் ஒருபொழுதும் அந்த ப்ரஹ்மத்தை விட்டு விலகியிருக்கமாட்டா. அந்தக் காரணத்தால் இந்த விஶேஷணங்களை 'அப்ருதக்ஸித்த விஶேஷணங்கள்' [அதாவது, பிரிந்து நிற்கக்கூடாத விஶேஷணங்கள்] என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்தச் சேதந வஸ்துக்களும் அசேதந வஸ்துக்களும், சிலகாலங்களில் நாமரூபங்களிராமல் ப்ரஹ்மத்தினிடத்தில் கிடக்கும்; மற்றும் சில காலங்களில் வெவ்வேறு பெயருடனும் வெவ்வேறு ரூபத்தினுடனும் நம்முடைய வ்யவஹாரத்திற்கு யோக்யமாகும்படி கிடக்கும். முதல் தசையை ப்ரளய தஶை என்றும் மற்றொன்றை ஸ்ருஷ்டி தஶையென்றும் நாம் வ்யவஹரிக்கிறோம். இந்த அவஸ்தா மாறுதலையே நாம் உத்பத்தியென்றும் விநாஶமென்றும் பேசுகிறோம். ஸ்ருஷ்டி காலத்தில் இதற்குமுன் இராத புதிதான ஒரு வஸ்துவும் ஸ்ருஷ்டிக்கப் படவில்லை; முன் நாமரூபமற்றிருந்த வஸ்துவே ஸ்ருஷ்டிகாலத்தில் நாமரூபமுடையதாய் மாறுகின்றது. குயவன் குடத்தைச் செய்தான் என்னுமிடத்தில், முன் இராத த்ரவ்யமொன்று இப்பொழுது புதிதாக உண்டாகிவிட்டது என்பது அர்த்தமன்று. முன் மண்ணாக இருந்த த்ரவ்யமே இப்பொழுது

குடமாயிருக்கும் அவஸ்தையை அடைந்திருக்கின்றது என்பதே அர்த்தம். ஆகையால் ‘ த்ரவ்யம் உண்டாகவுமில்லை, நஸிக்கவுமில்லை ; த்ரவ்யத்தின் அவஸ்தைதான் மாறுகின்றது ’ என்பது நமது ஸித்தாந்தம். இந்த அர்த்தத்தை ஸ்ரீபாஷ்யகாரர் பின்வருமாறு வெளியிட்டிருக்கிறார் :—

“ உத்பத்திவிநாஶாதயஸ்ஸதோ த்ரவ்யஸ்யாவஸ்தாவிஶேஷா: ” [உத்பத்தி என்றும் விநாஶ மென்றும் சொல்லப்படுமவையெல்லாம் எப்பொழுதும் இருக்கும் ஒரு த்ரவ்யத்தின் அவஸ்தா விஶேஷங்கள்].

இம்மாதிரியான அவஸ்தா ஸம்பந்தம் அசேதநமாகிற ப்ராக்ருத வஸ்துக்களுக்கு மாத்ரம் உண்டு, சேதநர்களாகிற ஜீவனுக்கு இல்லை என்பது இல்லை; சேதநம் அசேதநம் இவைகளுக்கு மாத்ரமே, ப்ரஹ்மத்திற்கு இல்லை என்பதும் இல்லை. இவைகளை விஶேஷணங்களாக உடைய ப்ரஹ்மத்திற்கும் உண்டு. ஆனல், அந்த ஸம்பந்தங்களெல்லாம் ஒரே மாதிரியை உடையவையல்ல. அசேதந த்ரவ்யத்திற்கு ஸம்பவிக்கும் அவஸ்தா ஸம்பந்தம் அந்த த்ரவ்யத்தையே பற்றியது. மற்றொன்றின் வழியாக இல்லை ; ஆதலால் அதை அத்வாரக மென்று சொல்வார்கள். சேதநனுகிற ஜீவனுக்கு ஸம்பவிக்கும் அவஸ்தா ஸம்பந்தம் ஜீவஸ்வரூபத்தைப்பற்றிய தன்று ; அந்த ஜீவனை ஆஶ்ரயித்திருக்கும் ஜ்ஞாநத்தையாவது, அந்த ஜீவனுக்கு ஶரீரமாயுள்ள அசேதந த்ரவ்யத்தையாவது த்வாரமாக உடையது. ஜீவனுடைய ஜ்ஞாநம் சில காலங்களில் மலர்ந்து நிற்பதையும் மற்றும் சில காலங்களில் முகுளிதமாயிருப்பதையும் நாம் பார்க்கிறோம். இது ஒரு அவஸ்தா ஸம்பந்தமே. இந்த ஸம்பந்தம் ஜ்ஞாநத்தைப்பற்றியதாக இருந்தபோதிலும், அந்த ஜ்ஞாநத்தின் ஆஶ்ரயமாக இருக்கும் ஜீவனையும் ஸ்பர்ஶிக்கிறதாதலால், அந்த ஜீவனை இந்த அவஸ்தாயோகியென்று நாம் சொல்லுகிறோம். தர்ம பூதஜ்ஞாந த்வாரா இந்த அவஸ்தை ஜீவனுக்கு ஏற்படுவதுபோல ஶரீரத்வாராவாகவும் ஜீவனுக்கு அவஸ்தைகளின் யோகம் உண்டு. இப்படி ஜ்ஞாநத்தின் வழியாகவும் ஶரீரத்தின் வழியாகவும் ஏற்படும் அவஸ்தா ஸம்பந்தத்தை ஸத்வாரகமென்று சொல்வார்கள். சேதநபதார்த்தங்களும் அசேதந பதார்த்தங்களும் பரமாத்மாவினுடைய அப்ருதக் ஸித்த விஶேஷணங்களாகையால், அவைகளுக்கு ஸம்பவிக்கும் அவஸ்தா ஸம்பந்தம் பரமாத்மாவுக்கும் நேர்கின்றது ; இதுவும் ஸத்வாரகம்.

இப்படி உத்பத்தி விநாஶங்களெல்லாம் அவஸ்தையின் மாறுதல்களே என்றும் பரமாத்மாவுக்கும் ஒருவிதமான அவஸ்தாஸம்பந்தம் உண்டாகின்றதென்றும் ஸித்தித்தால், அதைக்கொண்டு, ‘ பரமாத்மா ஜகத்திற்கு உபாதாநம், ஜகத் பரமாத்மாவுக்கு உபாதேயம் ’ என்பதை நாம் நன்றாக அறியக்கூடும். எப்படியெனில்; மண் பிண்டம் உபாதாநமென்றும், அது கடமாக மாறின பொழுது அந்தக் கடத்தை உபாதேயமென்றும் நாம் சொல்லுகிறோமன்றோ? அதாவது—பூர்வம் பிண்டத்வாவஸ்தை

யுடன் கூடிய மண்ணே உபாதாநம் என்றும் பிறகு மற்றொரு அவஸ்தையை [கடத்வாவஸ்தையை] அது அடையும்பொழுது அதை உபாதேய மென்றும் சொன்னதாயிற்று. அம்மாதிரியே, முதலில் ப்ரஹ்மம் நாம ரூபமற்ற சேதநாசேதநங்களை விசேஷணங்களாக உடைத்தாயிருக்கின்றது; பிறகு ஜகத் ஏற்படும் காலத்தில் வெவ்வேறு நாமரூபங்களையுடைய சேதநா சேதநங்களை விஶேஷணங்களாக உடைத்தாயிருக்கின்றது: ஆகையால், ப்ரஹ்மம் ஜகத்திற்கு உபாதாநமென்றும், ஜகத் ப்ரஹ்மத்தைக் குறித்து உபாதேயமென்றும் நாம் வ்யவஹரிக்கின்றோம். விசேஷணங்களுடன் கூடிய ப்ரஹ்மமே த்ரவ்யம்; அது முதலில் ஒருவித அவஸ்தையுடன் கூடி இருந்தது; பிறகு வேறு ஒரு அவஸ்தையை அடைகின்றது; ஆகையால், ஜகத்தும் ப்ரஹ்மமும் வேறுவேறு த்ரவ்யங்களோ என்னும் ஶங்கைக்கு அவகாஶமில்லை. இவையெல்லாவற்றையும் ஆலோசித்து நமது ஆசார்யர்கள் உபாதாநோபாதேயங்களின் லக்ஷணத்தைப் பின்வருமாறு சொல்லுகிறார்கள்.

"𑌸𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌵𑌤𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌯𑍋𑌗𑌿 𑌯𑌦𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌤𑌦𑍁𑌪𑌾𑌦𑌾𑌨𑌮𑍍; 𑌸𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍁𑌪𑌾𑌦𑍇𑌯𑌤𑍍𑌵𑌮𑍍" [வரப்போகும் அவஸ்தையை உடைய த்ரவ்யத்திற்கு, முன்னிருந்த அவஸ்தையை உடைய அந்த த்ரவ்யமே உபாதாநம்; வரப்போகும் அவஸ்தையை உடைத்தாயிருப்பது உபாதேயம்.

மற்றுமொரு ஶங்கை. ஸாவஸ்தாவத்தாக இருப்பதெல்லாம் [அதாவது வரப்போகும் அவஸ்தையுடன் கூடினதெல்லாம்] உபாதேயமென்றும், பூர்வாவஸ்தா வத்தெல்லாம் [அதாவது முன்னிருந்த அவஸ்தையுடன் கூடினதெல்லாம்] உபாதாந மென்றும் சொல்வது உபபந்நமாகுமோ? அப்படியானால் வரப்போகும் விபக்த நாமரூபாவஸ்தாவத்தான பரமாத்மாவைக் குறித்து அவிபக்த நாமரூபாவஸ்தைக்கு ஆஶ்ரயமாயுள்ள அசேதநம் உபாதாநமாக ப்ரஸங்கிக்குமன்றோ? சேதநனான பரமாத்மாவுக்கு அசேதநம் உபாதாந காரண மென்று சொல்வது அத்யந்தம் அஸங்கதமாயிற்றே. இதுதான் ஶங்கை. இந்த ப்ரஸங்கத்திற்கு இடமில்லை. ஏனென்றால், அசேதநம் காரணத்வேந அப்ரஸித்தம்; அதற்கு ப்ரமாணமேயில்லையன்றோ? ஆகையால் ஒரு த்ரவ்யம் உபாதாந காரணமென்று சொல்வதற்கு பூர்வாவஸ்தாவத்தாக இருப்பது மாத்ரம் போதாது; அதைக் காரணமென்று ப்ரமாணங்களும் சொல்லவேண்டும். இதற்காக ஒரு பரிஷ்காரத்தைச் செய்தால், லக்ஷணம் பின்வருமாறு நிற்கும்.

"𑌸𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌵𑌤𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌯𑍋𑌗𑌿 𑌯𑌤𑍍𑌕𑌾𑌰𑌣𑌂 𑌤𑌦𑍁𑌪𑌾𑌦𑌾𑌨𑌮𑍍"

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# தேவாலய தர்மம்

[ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வாந்
ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.]

இது நிற்க மனிதனாகப் பிறந்தவன் தான் ஏதோ ஒரு பலத்தை அபேக்ஷித்தால் அது தேவதையினுடைய ஆராதனத்தினால் ஸம்பாதிக்க வேண்டுமென்று முடிந்தால், அந்தத் தேவதையை எப்படி ஆராதிக்கிறதென்று சாஸ்த்ரங்களை விசாரித்தால், எல்லாத் தேவதைகளையும் பக்தி யோகத்தினால் ஆராதிப்பதுதான் முக்யமென்றும், அதைச் செய்ய முடியாதவன் அந்தத் தேவதையினுடைய விக்ரஹத்தின் மூலமாக அந்தத் தேவதையை ஆராதித்து இஷ்டமான பலன்களை அடையலாமென்றும் ஆகம சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன.

பாஞ்சராத்ரம்—பாத்ம ஸம்ஹிதை க்ரியாபாதத்தில் ப்ரஹ்மா,

“ப⁴க³வந் தே³வதே³வேஶ ஶங்க²சக்ரக³தா⁴த⁴ர ।
ஜ்ஞாநயோக³ஶ்ச கார்த்ஸ்ந்யேந நிர்வாணப²லத³꞉ ஶ்ருத꞉ ॥
தயோரவிது³ஷாம் தே³வ நாயிகாஸ்ஸ்த²ரசர ।
அஜ்ஞாநிநாம் ச ப⁴க்தாநாம் முமுக்ஷூணாம் ந்ருணாம் ॥
யேநோபாயேந நிர்வாணம் ஸ்வர்கா³தி³ர்வா ப⁴வேத் ।
ஸத்யோபாயம் தம்ருஜும் மார்க³ம் வக்துமர்ஹஸி ॥”

ப்ரம்ஹாவானவர் பகவானைப் பார்த்து [சங்கம், சக்ரம், கதைகளைத் தரித்துக் கொண்டிருக்கிறவனாய், தேவர்களுக்கெல்லாம் தேவதையாய், ஜ்ஞாநாதி குணங்களை யுடையவனாயிருக்கிற ஓ ஈஸ்வரனே! மோக்ஷபலத்தைக் கொடுக்கக் கூடிய ஜ்ஞாநயோக பக்தி யோகங்கள் பூர்ணமாக கேட்க்கப்பட்டன. ஜ்ஞாந மில்லாதவர்களாய், பக்தர்களாய், மோக்ஷத்தை அடைய ஆசையுள்ளவர்களாய், அந்த ஜ்ஞாநயோகம் பக்தி யோகங்களில் அறிவில்லாத மனிதர்களுக்கு எந்த உபாயத்தினால் மோக்ஷமோ மற்ற ஸ்வர்க்காதிகளோ உண்டாகுமோ, அப்படிப்பட்ட ருஜுவான மார்க்கத்தை நீர் உபதேசிக்க வேண்டும்.] என்று ப்ரம்மா கேட்டதற்குப் பகவான் பதில் சொன்னதாவது :—

ப⁴க³வாந்—“க்ருத்வா ப்ரதிக்ருதிம் ஸம்யக்³தா³ருலோஹஶிலாதி³பி⁴꞉ ।
தத்ர ஸ்தா²பயித்வா மாம் ஶாஸ்த்ரத்³ருஷ்டேந வர்த்மநா ॥
யஜஸ்வ மாம் ப⁴க்த்யா ப்ரணிதா⁴நேந ஸமாஹித꞉ ॥”

[ஓ ப்ரம்ஹாவே! மரத்தினாலாவது, வெள்ளி தாம்ரம் முதலிய லோஹங்களினாலாவது கல்லினாலாவது மற்றும் சாந்து முதலியவற்று

லாவது என்னுடைய ப்ரதிமையைச் செய்து, அதைத் தேவாலயத்தில் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட முறையினல் ப்ரதிஷ்டை செய்து, மேலே சொல்லப்படப் போகிற க்ரமத்தினல் பூஜையைப் பண்ணு.

“ கஷிூணாதிவூதிஷாதக்ரியாவியிஃதஃஹூணா |
வக்ஷூுாமி யெந வியிநா ஆஸீஷாடூவிராடிஹபூ ||”

எந்தக் காரியத்தைச் செய்தால் நான் சீக்கிரத்தில் ப்ரஸந்நனுவேனே கர்ஷணம் முதல் ப்ரதிஷ்டாந்தமான அந்தக் கார்யத்தைச் சொல்லுகிறேன் கேளும்] (கர்ஷணமாவது: கோயில் கட்டக் கூடிய பூமியை உழுகிறது. ப்ரதிஷ்டையாவது: விக்ரஹத்தில் பகவானை மந்த்ரங்களைச் சொல்லி ஆவாஹநம் செய்வது.)

“ கயீதி நொ யெ விஷாவா ஶாஜூாணி ஹூதவவிூணஃ |
தெ ஓா० ஹஜநெ வாராஷாஃ ஜூாநயொமவராயணாஃ ||”

எந்த மனிதர்கள் முன்னடியே சாஸ்த்ரங்களை வாசித்து ப்ரம்ஹ வித்யைகளையும் ஆசார்யர்களிடம் உபதேசித்துக் கொண்டிருக்கிறார்களோ; ஜ்ஞாந யோகத்தையோ பக்தி யோகத்தையோ உபாயமாக நம்பி இருக்கிற அந்தப் புருஷர்கள் அந்த ஜ்ஞாநயோக பக்தி யோகங்களினல் என்னை ஆஶ்ரயிக்கிறார்கள்.

கநெுஷாஓவூவிஷஷா० ஹக்ஷூாநா० வஹாஸ०வஷாபூ |
ஜாயதெ ஸிஷிரவிராக ஸூாநெ ஸூவயதாஹ ஓாபூ ||

[அந்த ஜ்ஞாந யோகங்களை அறியாதவர்களாய் என்னிடத்தில் பக்தியுள்ளவர்களான தனிகர்கள் எனக்காக ஓர் ஆலயத்தைக் கட்டி அதில் என்னுடைய விக்ரஹத்தை ஶாஸ்த்ரம் சொல்லுகிற முறையாக ப்ரதிஷ்டை பண்ணினல் சீக்கிரமாகவே எல்லாப் பலன்களும் அவர்களுக்கு உண்டாகும்.] தவிரவும்,

“ ஜூாந० யொமஶு யதிஷ० கெவஸ० ஓக்திகாரணபூ |
ஸூாவயிகவா த ஓா० ஸூாநெ வாராஷஸூவூஓஹூதெ ||”

[ஜ்ஞாநயோக பக்தி யோகங்கள் (பெரும்பாலும்) மோக்ஷத்திற்காகவே அநுஷ்டிக்கப் படுகின்றன. என்னுடைய விக்ரஹத்தைக் கோயிலில் ப்ரதிஷ்டை செய்தால் மனிதன் ஸர்வ பலன்களையும் அடைகிறான்.]

யொ ஓா० ஸ०ஸூாவூ ஸஷநெ ஸஓாராயயதி ஸூய० |
ந தஸூ கெவஸ० ஸிஃஃ ஸூாநாஹாூணஜஷாஓவி ||

[எந்த மனிதன் கோயிலில் என்னை ப்ரதிஷ்டை செய்து பூஜிக்கிறானே, அதினல் அவனுக்கு மாத்ரம் பலம் என்பதில்லை; மற்றும் தேவாலய ஸமீபத்திலிருக்கும் எல்லா மனிதர்களும் கோயிலில் வந்து என்னை ஸேவித்து வேண்டிய பலன்களைப் பெற்றுக் கொள்ளலாமாகையினல் இது அவைகளைக் காட்டிலும் அதிகமான பலன்களை கொடுப்ப

தாகிறது.] இங்கு, 'கோயிலுக்கு ஸமீபத்தி லிருக்கிறவர்களுக்கும் பலன்களுண்டு' என்று சொல்வதால்,

ந கிஞ்சித³பி குர்வாணோ விஷ்ணோராயதநே வஸேத் |

என்கிறபடியே தேவாலய ஸமீபத்தில் திருடுவது முதலிய கெட்ட கார்யங்களைச் செய்யாமல் வஸிக்கிறவர்களுக்கும் கூட "கடைத்தலை யிருந்து வாழும் சோம்பரை யுகத்தி" என்றும், "கடைத்தலை சீய்க்கப் பெற்றால் கடுவினை களையலாமே" என்றும் சொல்லுகிறபடியே பலன்களுண்டென்று சொல்லப்பட்டதாகிறது.

இப்படி பக்தியோகம் பண்ண முடியாதவன் தேவாலய கைங்கர்யங்களினால் இஷ்டஸித்தியை அடையலாம் என்கிற விஷயமானது, பகவத் கீதை 12-வது அத்தியாயத்தில்—ஸ்ரீ க்ருஷ்ணன் அர்ஜுனனை குறித்துச் சொன்ன,

"அப்⁴யாஸேऽப்யஸமர்தோ²ऽஸி மத்கர்மபரமோ ப⁴வ |
மத³ர்த²மபி கர்மாணி குர்வந் ஸித்³தி⁴மவாப்ஸ்யஸி ||"

என்கிற ஸ்லோகத்தில் 'பக்தி யோகத்தைச் செய்கிற விஷயத்தில் உனக்கு ஸாமர்த்திய மில்லாவிட்டால் என்னுடைய கைங்கர்யங்களைப் பண்ணு; என்னுடைய கைங்கர்யங்களைச் செய்வதனால் நீ இஷ்டப்ராப்தியை அடைவாய்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு 'என்னுடைய கர்ம' என்கிற சப்தத்திற்கு பாஷ்யகாரர் "தேவாலய நிர்மாணம், புஷ்பத் தோட்டம், விளக்கேற்றுவது, ஆலயத்தைப் பெருக்குவது, ஜலம் தெளிப்பது, மெழுகுவது, பூஜைக்குப் புஷ்பங் கொடுப்பது, பூஜை இல்லாத கோயிலில் பூஜை நடக்கும்படி செய்வது, நாமகீர்த்தநம், ப்ரதக்ஷிணம், நமஸ்காரம், ஸ்தோத்ரம் பண்ணுவது இவை முதலிய கார்யங்கள் என்று பாஷ்யம் பண்ணி இருக்கிறார். இவைகளைச் செய்வதனால் ஸ்திரமான பக்தி உண்டாகி, என்னை யடைவாய்" என்று இந்தக் கீதையினாலும், பாஷ்யத்தினாலும் தேவாலய தர்மம் மோக்ஷத்திற்குக் காரணமென்று ஏற்படுகிறது.

வைகா²நஸஸூத்ரே ஶ்ரீவிஷ்ணோ அஸ்ய ஸத³ந ஸம்மார்ஜநம் உபலேபநம் ப⁴வதி ஜல - க³ந்த⁴ - புஷ்ப - தூ⁴பாதீ³நி | ஸாவித்ரீ பவித்ரம் வைஷ்ணவீஸூக்தம் அஷ்டாக்ஷரம் வா ஸஹஸ்ரம் த்³வாத³ஶாக்ஷரம் வா ஜபேத்—ஸர்வதா³ |

அஹ்நோ ராத்ர்யோஶ்ச யத்பாபம் தத்க்ஷணாந் நஶ்யதி |

தே³வாயதநே வா வைஷ்ணவே ஸம்மார்ஜந ப்ரதி³யாம் உபஜநம் யத்நவாந் ||

[illegible]

[illegible]

இப்படி விக்ரஹத்தைப் பூஜிப்பதினல் மோக்ஷபர்யந்த பலன்களை அடையலாம் என்று காமிகாகமம் முதலிய சைவாகமங்களிலும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனல் இக்காலத்தில் — தயாநந்தருடைய மதாநுஸாரிகளான சிலர் இந்த விக்ரஹாராதநத்தைத் தூஷிப்பதுண்டு. சிலர் விக்ரஹாராதநம் வேதத்தில் சொல்லப்படாததனல் செய்ய கூடாதென்கிருர்கள். சிலர் நாம் அபேக்ஷிக்கிற பலன்களைக் கொடுப்பதற்கு வேண்டிய ஜ்ஞாந சக்தி பூர்ணனுய் எங்கும் வஸிக்கிற ஸர்வேஸ்வரனை விட்டு அறிவில்லாததாய் சக்தி யில்லாததான விக்ரஹத்தை எதற்காகப் பூஜிக்க வேண்டுமென்கிருர்கள். மற்றும் சிலர் ‘[illegible]’ ஈஸ்வரனுக்கு ஶரீரம் கிடையாதாகையினல் அவனுடைய தேஹத்திற்கு ப்ரதிமை கிடையாதென்று வேதம் சொல்லுகிறதென்கிருர்கள். ‘[illegible]’ என்கிறபடியே அறிவில்லாத மூடர்கள் ப்ரதிமையைப் பூஜிக்க வேண்டியது என்கிருர்கள். இப்படிப் பலவாருக விக்ரஹாராதநத்தைத் தூஷிக்கிருர்கள்.

வேதங்களில் விக்ரஹாராதநம் சொல்லப்படவில்லை யென்று சொல்வது சரியல்ல. இந்த வார்த்தையை, வேதங்களை முழுவதையும் நன்ருகக் கற்றுணர்ந்தவரன்ருே சொல்லவேண்டும்? ஒரு வேதத்திலும் ஒரு பாகத்திலும் ஒரு வாக்யம் கூடத் தெரியாதவர்கள், வேதங்களில் விக்ரஹாராதநமில்லை யென்று சொல்லத் துணிவது கலியின் கொடுமை என்றே நாம் நினைக்கிருேம். வேதத்தில் சொல்லப்படாததனல் விக்ரஹாராதநம் செய்யக் கூடாதென்று சொல்லுகிறவர்கள், வேதத்தில் சொல்லப்பட்ட விஷயங்களை ஒப்புக்கொள்வதாகத் தோன்றுவதால், தற்காலத்தில் நம்மால் அத்யயநம் பண்ணப்படுகிற காடகம் என்கிற

வேதத்தில் பரத்வாஜர் என்கிற ரிஷியானவர் மூன்று ஜந்ம காலங்களிலும் வேதங்களையே அத்யாயநம் செய்ததாகவும், மூன்ருவது பிறவியின் கடைசி காலத்தில் இந்த்ரன் அவரைப் பார்த்து 'நான்காவது ஜந்மம் மனிதனுகப் பிறந்தால் என்ன காரியம் செய்யப் போகிறீர்?' என்று கேட்டதாகவும், 'வேதாத்யயநத்தையே பண்ணப் போகிறேன்' என்று அவர் சொன்னதாகவும், அவருக்கு அந்த ரிஷி மூன்று பெரிய மலைகளைக் காட்டி அம்மலைகளிலிருந்து மூன்று பிடி மண்ணை எடுத்துக் கொடுத்து, 'அப்பெரிய மலைகளுக்கு இந்த மூன்றுபிடி மண்போல அளவிறந்த வேதங்களில் நீர் மூன்று ஜன்மங்களினுலும் அத்யயநம் செய்தது இவ்வளவுதான்; வேதங்களுக்கு அளவில்லையாகையினுல் வேதங்களை முழுவதும் அத்யயநம் பண்ண முடியாது' என்று இந்த்ரன் சொன்னதாக இருப்பதால், அளவில்லாத வேதங்களை ஒருவன் எப்படி முழுவதும் பார்த்ததாகச் சொல்ல முடியும்? ஆகையினுல் வேதத்தில் விக்ரஹாராதநமில்லை என்கிற வார்த்தை அங்கீகரிக்கக் கூடியதல்ல.

ஹாரீதெ ருஷிவவநணி ச. 57

யஸ்ய நாராயணோ தேவோ தேவதேவஸ் ஸநாதந: ।
தஸ்யாம்ஸோ ஹ்யநந்தஸ்ஸர்வஸ்ஸ வாஸுதேவ: ப்ரதாபவாந் ॥

இதி - சம்ஸயஸ்யாவதாரகமநாய - ஸூர்யவம்ஸ்ய நிஷ்க்ருதி ப்ராதுர்ப்ராவம் - 'நித்யஸித்தஸ் தஸ்யாகாரஃ' 'ஸர்வோபநிஷத்ஸுதாஃ' — தத்ப்ராவிர்ப்ராவ்ய ஹமவதஸ்ஸீரவக்ஷஸ்ஸ்தவணாஸ ஸமீர யெஷ்வாவதார: । சதவண 'ஸதாபி கெஸள ஹரிராதவஹப்ரஷ்ஷா ஸெகவேணாபி க்ருஷ்ணம் । ஏவமபி கெஸள நிவிஸெதாம் யதுவம்ஸ க்ஷேயஸக்ரியள தேவகீம் ரோஹிணீம் ச । தயோரேகோ பலதேவோ பஹுவ யோஸள ஸ்வேதஸ்தஸ்ய தேவஸ்ய கெஸ: । க்ருஷ்ணோ த்விதீய: கெஸஸ்ஸம்பஹுவ கெஸோ யோஸள வர்ண: க்ருஷ்ண உக்த: ॥

பரோவ்யூஹஸ்ச விபவோ நியந்தா ஸர்வதேஹிநாம் ।
அர்ச்சாவதாரஸ்ச ததா தயாளு: புருஷாக்ருதி: ॥
இத்யேவம் பஞ்சதா ப்ராஹு: ஸ்தாநம் ரஹஸ்யவிதோ ஜநா: ।
பிம்பாக்ருத்யாத்மநாபிம்பே ஸந்நிதத்யாவதிஷ்டதே ॥
அர்ச்சாபி லௌகிகீ யாஸா ஹமவல்லாவிதாத்மநாம் ।
ஸுத்தஸுத்தேர்ப்ராந்த்யாஸாஸ் ஸாபி ஷாட்குண்யவிக்ரஹா ॥

தத்காலத்திய வேதத்திலும் ப்ரதிமை சொல்லப் பட்டிருக்கிறது. ருக்வேதம் அஷ்டகம் 8, அத் 7, வர்க்கம் 18, ருக்-3-ல்

"காஸீத் ப்ரமா ப்ரதிமா கிம் நிதாநமாஜ்யம் கிமாஸீத் । பரிதி: கிமாஸீத் சந்த: கிமாஸீத் ப்ரஉகம் கிமுக்த்யம் யத்தேவா தேவமயஜந்த விஸ்வே ।

तैत्ति संहितायां [illegible]

सुदेवो असि वरुण यस्य ते सप्त सिन्धवः ।
अनुक्षरन्ति काकुदं सूर्म्यं सुषिरामिव ।

'सूर्मी सुषिराऽयःप्रतिमा' इत्यर्थः — सूर्मीं ज्वलन्तीं [illegible] ।

यथा सचित्रां लोहमयीं प्रतिमां प्रविश्याग्निः प्रकाशते । तद्वच्च स देवः सप्रकाशः कवीत्यर्थः । सामवेदीयाद्भुतब्राह्मणे - अथ यदास्य यानानि प्रवर्तन्ते, देवतायतनानि कम्पन्ते देवताप्रतिमा हसन्ति रुदन्ति नृत्यन्ति स्फुटन्ति स्विद्यन्ति उन्मीलन्ति निमीलन्ति—सर्वं [illegible] ” इति ।

वैखानससूत्रे - [illegible] — प. 458. [illegible]
निमित्तशान्तिकरणप्रकरणे

[illegible] प्रतिमारोदन - हसन - जल्पन - [illegible] - रुधिरस्राव [illegible]

[illegible] ॥

---

## பஞ்சாங்க ஸங்க்ரஹம்

### சித்ரபாநு௵ வைகாசிமீ

| | | |
|---|---|---|
| 1உ வியாழக்கிழமை | — | அமாவாஸ்யை சூந்யதிதி ரிஷப ரவி 18-14. |
| 4உ ஞாயிறு | — | அதிதி. |
| 16உ வெள்ளி | — | சதுர்த்தசி பூர்ணிமா திதி த்வயம். |
| 31உ சனி | — | அமாவாஸ்யை-வ்ருஷப மாஸத்திய அமாதிதி. |
| 32உ ஞாயிறு | — | சூந்யதிதி. |

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரவரமுநயே நம:

# இராம வேழம்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி
ஸ்ரீ உப. ரே. திருமலை அய்யங்கார், தமிழ் வித்வான்.]

பூவளரு திருமாது புணர்ந்த புண்ணியனர், தமது கட்டளை செல்லாத நாட்டில் தாமே சென்று தண்டம் நடத்தும் அரசர் போல, இவ்வையத்துள்ள உயிர்கட்கு நல்லறிவு கொளுத்த வேணுமென்று திருவுள்ளங் கொண்டு, திசைமுகன் முதலிய தேவகணங்களின் வேண்டுகோளையும் தன்னைப் புதல்வனாகப் பெறுமாறு நோற்றிருந்த தசரதனது கருத்தையும் முற்றுவித்தற்காக இராமன் முதலிய நான்கு வடிவுடன் இம் மண்ணுலகில் தசரத குமாரராகத் திருவவதரித்தான்.

" மசரத மனையவர் வரமும் வாழ்வுமோர்
நிசரத கணைகளா னீறு செய்ய யாங்
கசரத துரகமாக் கடல்கொள் காவலன்
றசரதன் மதலையாய் வருதுந் தாரணீ "

[இராமாவதாரம். பால, திருவவதாரப் படலம். 22.]

என்பதை நோக்குக.

" தேவுடைய மீனமா யாமையாய் ஏனமா யரியாய்க் குறளாய்
மூவுருவி லிராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய் "

என்று பெரியாழ்வாரும்;

" மீனோடாமை கேழ லரிகுறளாய் முன்னுமி ராமனாய்த்
தானாய் பின்னு மிராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியும் "

என்று திருமங்கையாழ்வாரும்;

" நடையி னின்றுயர் நாயகன் றோற்றத்தி
னிடைநி கழ்ந்தவி ராமாவதாரம் "

என்று கம்ப நாட்டாழ்வாரும்;

" மீனோ டாமை கேழல் கோளரியாய் வானர் குறளாய் மழுபபடை
பின்னுமி ராம ரிருவராய்ப் பாரில் [முனியாய்ப்
துன்னிய பரந்தீர் துவரை மன்னனுமாய்க்
கலி தவிர்த் தளிக்குங் கற்கியாய் "

என்று மறை முடித் தேசிகனாரும் கூறியாங்கு, பகவானின் அவதாரங்களுள் பரசுராம பலராமர்களுக் கிடையே யுள்ளது தசரத ராமாவதாரம் என்பது வெளிப்படை.

" கற்பா ரிராம பிரானை யல்லால் மற்றுங் கற்பரோ ?" என்கிறார் தென்குருகூர்ச் சடகோபர். " தயரதற்கு மகன் தன்னையன்றி மற்றி

லேன் தஞ்சமாகவே" என்றுங் கூறுவர். தாய்மாரும்தோழிமாரும் தடுக்கவும் தலைவி திருப்பேரைக்குச் செல்வேனென்று துணிந்ததை ஆழ்வார்,

"பேரெயில்சூழ் கடல் தென்னிலங்கை
செற்றபிரான் வந்து வீற்றிருந்த
பேரையிற்கே புக்கு என்னெஞ்சம் நாடிப்
பேர்த்துவர வெங்கும் காணமாட்டேன்"

எனப் பாசுர மிட்டுள்ளார்.

"ஆசைபற்றி யறைய லுற்றேன் மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ"

என்பர் கல்வியிற் பெரிய கம்பர். "தோராத தனிவீரன்" என்பர் வேதாந்த தேசிகர். எனவே இராமாவதாரம் இணையற்றது என்பதோர் பேருண்மை.

இராமபிரானை முற்றுவமைபற்றி வேழமாக உருவகஞ் செய்துள்ளார் ஒரு அபியுக்தர். அதனைச் சற்று விவரிப்பாம் இங்கு.

ஸ்ரீராமனும் சீதையும் கோதாவரி நதியி னருகில் உல்லாசமாகச் சஞ்சரிக்கிறார்கள். அங்கு ஓர் அன்னப்பறவை ஒதுங்கி நடத்தலைக் காண்கிறான் அமலன். அவனுக்கு மைதிலியின் நடை நினைவுக்கு வருகிறது. உடனே அவள் நடையை உற்று நோக்கி அது அன்ன நடையினுஞ் சிறந்திருத்தலை யுணர்ந்து ஒரு புன்சிரிப்புச் செய்கிறான். அப்பொழுது அங்கு வந்து நீர் பருகிய யானை மீண்டு செல்வதைக் கண்டு சானகி அயோத்திய ரிறையின் நடையை உற்றுப் பார்த்து, அது வேழ நடையினுஞ் சிறந்திருத்தலை யுணர்ந்து சிறிது சிரிக்கிறாள். இதனை மஹா கவியாகிற கம்பர்,

"ஓதிம மொதுங்கக் கண்ட வுத்தம னுழைய லாகுஞ்
சீதைதன் னடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவ டானு மாண்டு வந்துநீ ருண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்"

[ஆரணிய், சூர்ப்பணகை. 5]

என்கிறார்.

வேழம் ஒருநாள் கண்டோமென்று திருப்தியாயிருக்க வொண்ணுதபடி தினந்தோறுங் காணவேண்டு மென்னும் விருப்பத்தை யுண்டாக்கும். பார்க்கும்போதெல்லாம் அபூர்வ வஸ்து போலவே யிருந்து பரமாநந்தத்தைத்தரும் கஜம். இராமனும் தினந்தோறுங் காணத்தக்க வடிவழகுடையவன்.

"தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழற் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கைகண் டாருமஃதே
வாள்கொண்ட கண்ணார்யாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னா னுருவுகண் டாரையொத்தார்"

[பால. உலாவியல். 19]

என்றானிறே கம்பனும்.

"அஞ்சனமுங் காயாவு மனையமேனி
அடியவர்க்கு மெய்யனே யயிந்தைவாழும்
அஞ்சலென வருள்பொழியும் வள்ளலேநின்
வடிவழகு மறவாதார் பிறவாதாரே" [நவமணி மாலை. 6]

என்பது தூப்புல் வள்ளலார் தூமொழி.

அப்பொழுதைக் கப்பொழுது ஆராதவருளமுதமா யிருப்பவனே அகார வாச்யனான அண்ணல். மயன் மகளாகிய வண்டோதரி,

"ஆரா வமுதா யலைகடலிற் கண்வளரும்
நாரா யணனென் றிருப்பே னிராமனைநான்"

என்றுறுதி கூறினள். [இராவணன் வதை. 245]

தன்மீது ஏற நினைப்பார்க்குத் தன்னைப் பணிந்து கொடுக்கும் யானை. தன்னை அடைய விரும்பினவர்க்குத் தன்னைக் கொடுக்குஞ் சீலம் தம்பிரானிடமுள்ளது.

"மும்மைசா லுலகுக் கெல்லா மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்குந் தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே யெழுமை நோய்க்கு மருந்தினை யிராம னென்னும்
செம்மைசேர் நாமந் தன்னைக் கண்களிற் றெரியக் கண்டான்.
[கிட்கிந்தா. வாலி வதை. 71]

என்பது அநுஸந்தேயம். ஆனையின் மீது ஏறவேண்டியவன் அதன் காலைப் பற்றியே ஏறவேண்டும். எம்பெருமானிடம் சென்று சேர வேண்டியவர்களும் அவனது திருவடியையே பற்றிச் சேரவேண்டும்.

"என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கி
* * * *
இன்னமு தத்திரு மகளென்றி வரை முன்னிட்
டெம் பெருமான் திரு வடிகளடை கின்றேனே."
[தேசிகமாலை. அதிகாரஸங்கிரஹம்.]

"அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழன் மனனே."

என்பன காண்க. [திருவாய்மொழி. 1—1—1]

யானை தன்னைக் கட்டத் தானே கயிறு கொடுக்கும். எம்பெருமானைக் கட்டுப்படுத்தும் பக்தியாகிற கயிற்றை அவன்றானே தந்தருள்வன்.

"மட்டுலாவு தண்துழா யலங்கலாய் பொலன்கழல்
விட்டுவீள் விலாதபோகம் விண்ணில்நண்ணி யேறினும்
எட்டினோ டிரண்டெனும் கயிற்றினால் மனந்தனைக்
கட்டிவீ டிலாதுவைத்த காதலின்ப மாகுமே."
[திருச்சந்தவிருத்தம். 83]

என்பர் மழிசை வந்த சோதி. "அன்பா லின்றென்னை யறிந்தே பிணித்தமை நன்று, என்பாதந் தன்னை யினிவிடுக" என்றான் மாயவன் சகதேவனை நோக்கி.

"உன்னை நீதானு முணராதா யுன்வடிவந்
தன்னை நீகாட்டத் தளர்ந்திடுவன் யானென்றான்" தெய்வமன்னன்.

'உயர்வற வுயர்நல முடையவன் மயர்வற மதிநலம் அருளினன்' என்னக் கடவதிறே.

யானையைப் பிடிப்பவர்கள் பெண்யானையைக்கொண்டு பிடிப்பார்கள். பிராட்டி புருஷகாரத்தால் எம்பெருமான் வசப்படுகிறான். காகவிபீஷணாதிகள் பக்கலிலே இதனைக் காணலாம். இராமனைப் பார்த்துவாலி,

"கோவியற் றரும முங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத வொண்ணா வுருவத்தா யுடைமை யன்றோ
ஆவியைச் சனகன் பெற்ற வன்னத்தை யமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலுஞ் செய்கை"

[கிட்கிந்தா வாலி வதை. 78]

என்றேசுதல் காண்க. போதார் திருவுடன் பொன்னருள் பூத்து நிற்பவன் நம் புண்ணியனான மாபுருடன்.

உக்கிர நரசிங்க மூர்த்தி, அமுதிற் பிறந்தாள் அணுகலும், முந்தாவுலகு முயிரும் முறையே தந்தானை நோக்கி, எடுத்த சீற்றம் விட்டு, திரு நரசிங்கத் தேவனாய்த் திகழ்ந்தான்.

"மல்ல லரியுருவாய்" [திருவாய்மொழி 7—5—8] என்றவிடத்து, "மல்லல்-பெருமை. 'மஹாவிஷ்ணும்' என்னும்படியே, ஹிரண்யன் குளப்படி யாம்படியாகப் பெரிய வடிவைக் கொண்டு, மல்லலென்று ஸம்பத்தாய், அத்தால்-லக்ஷ்மீ நரஸிம்ஹா யென்னவுமாம்; 'நாராயணோ ந்ருஸிம்ஹஸ்து லக்ஷ்ம்யா ஸார்த்தம் வ்யவஸ்தித:' இறே. அவளை யொழிந் திருப்பதொருபோதில்லை யிறே" என்பது ஈடு முப்பத்தாறாயிரப்படி.

'உந்து மதகளிற்றன்' என்ற ஸ்ரீகோதோப நிடதப் பாசுரம் பெரும்பூதூர் வந்த வள்ளல் உகந்ததென்பர் பெரியவாச்சான்பிள்ளை, பெரிய பிராட்டியின் தத்துவம் நன்குணர்ந்தார்க்கே உண்மை புலனாகும். திருக்காணும் பெற்றியரே திருவர்.

யானையானது நன்கு நீராடி யிருந்தாலும் அடுத்த க்ஷணத்திலே புழுதி மண்ணிலே அளைந்து தன்னுடம்பை அழுக்காக்கிக் கொள்ளும். எம்பெருமான் பரம பவித்திரனா யிருக்கச் செய்தேயும் அழுக்குடம்புடைய நம்போல்வாரோட சேரத் திருவுள்ளமா யிருப்பன். "வாத்ஸல்யம்—'நீசனேன் நிறைவொன்றுமிலேன்' என்று ஸ்வதோஷத்தைக் கண்டு அவன் அநாதரிக்கிறானென்று வெருவாமைக்குறுப்பாம்" (ஸாரஸாரம்) என்றபடி இது அவனது வாத்ஸல்ய குணகாரியம்.

"ஸ்வம் ஸம்ஸ்ருத்த்ராவிபவேதஸம்ப்ரேக்ஷத:
ஸாக்ஷம் மேதஸேஷ்யுமிநீ கரோதி ।
ஸ்ரீரங்கராஜ: கலஹம் க வஸவ
ஹாத்வாவியம்ஜீரவஸிகம் நிஷேத்யா ॥"

[ஸ்ரீரங்கராஜஸ்தவம். 16]

[ஸ்ரீரங்கநாதன் வடமொழி வேதங்களாலும் ஆழ்வார்கள் அருளிச் செயல்களாலும் நன்கு விளங்கா நிற்கிற தம்மை அடியேனுடைய புன் கவிதைகளால் மாசேறும்படி செய்து கொள்ளுகிறான். நீராடிய பின்பும் புழுதியளைவதில் விருப்பமுள்ள கலபத்தை எவன்தான் தடை செய்யவல்லான்?] என்ற ஸ்ரீ பராசரபட்டரின் ஸ்ரீ ஸூக்தி காண்க. இராமனை 'தென்சொற் கடந்தான் வடசொற்கலைக் கெல்லை தேர்வான்' எனப் புகழ்வர் கம்பநாடர்.

யானை கைக்கெட்டினாரை நினைத்தபோது எடுத்துக் கழுத்திலே வைத்துக் கொள்ளும், எம்பெருமான் தன்னை சரணமடைந்தோரை அவர்கள் குற்றங்களைக் கருதாது போக்கியமாகக் கொள்வன்.

பாகனுடைய அநுமதி பெற்றவரை யேற்கும் யானை.

"வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப் பாதம் பணிந்து" என்றபடி பாகவதர்களை முன்னிட்டுப் புகுந்தவரை அங்கீகரிப்பன் ஆதியம்பகவன்.

சிருங்கிபேர நகருடை வாழ்க்கையனான குகன் கங்கைக் கரையில் வந்திருந்த வள்ளலிராமனைக் காண வருகின்றான். தன் சுற்றமெல்லாம் அப்புறம் நிற்க, சுடுகணை விற்றுறந்து, வீங்கிய வாளொழித்து, அற்ற நீத்த மனத்தினனாய், அன்புமிக்கு, நற்றவப்பள்ளி வாயிலை நண்ணுகிறான். கூவா முன்னம் இளையோன் குறுகி "நீ ஆவான் யார்?" என, அன்பனும் அவனை இறைஞ்சி "தேவா! நின்கழல் சேவிக்க வந்தனன், நாவாய் வேட்டுவன் நாயடியேன்" என்கிறான். இங்கு இலக்குவன் ஆசாரியனாயிருந்து இராமபிரான் ஸேவையை குகனுக்குச் செய்து வைக்கிறான் என்பது நுட்பம்.

யானையின் பாஷை யறிந்தவன் யானைப்பாகன். முழுதுணர் நீர்மையினோர் முழுதுலகாளியுடனே பேசுவர்.

"வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்."

இங்கு 'தேவர்' என்றது தேவாதி தேவனான அயோத்திரிறையை என வறிக. பேரருளாளனோடே பேச வல்லார் நம்பிபோல்வாரே. அவன் பேச்சு அவரே அறிகுவர்.

மத்தகஜத்தின் நடையில் மதிப்புண்டு. மதகளிற்றனைய மால் நன்னடையழகன். நம்பெருமாள் நடையழகில் நான்கு கதிகளும் நன்கு காணலாம். இராமபிரான் வில்லுள்ள இடத்தை நோக்கிச் செல்வதைக் கம்பர்

"தோகைய ரின்னன் சொல்லிட நல்லோ
ரோகை விளம்பிட வும்ப ருவப்ப
மாக மடங்கலு மால்விடை யும்பொன்
னாகமு நாகமு நாண நடந்தான்" [அயோ, கார்முகப். 32]

என்கிறார்.

[தோகையர் - மாதர்; நல்லோர் - முனிவர்கள்; ஓகை - சந்தோஷம்; மாகம் - வானுலகம்; உம்பர் - தேவர்; பொன் நாகம் - பொன்மலையாகிய மேரு; நாகமும் - யானையும்; நாண - வெள்கும்படி.]

வேழம் மிக்க செருக்குடையது. எம்பெருமான் எப்பொருட்கும் இறைவனுயிருக்குந் தன்மை தோற்றச் செருக்குடையவனுய் காட்டுவான்.

யானை நீண்ட கையுடையது. வேண்டினர் வேட்கையின்மேற் பட வீசும் நீண்ட கையன் தருகை நீண்ட தயரதன் தான் தரும் இராமன். வேழத்துக்குத் துதிக்கை யொன்றேயுளது. கொடுக்குங்கை யொன்றுடையவனே கொண்டல் வண்ணன்.

கலபம் உகவாதாரை ஆராயாது அழிக்குந்தன்மையது. பகவான் ஆஸ்ரித விரோதிகளை ஆராயாது அழிக்கின்ற விரோதி நிரஸந ஸ்வபாவம் உடையவன். திருமால் தேவதைகட்கு அபயமளிக்கையில்

'மன்றலந் துளவினுன் வருந்தல் வஞ்சகர்
தந்தலை யறுத்திடர் துணிப்பன் ருரணிக்கு'

என்று கூறினன், என்பர் கம்பர். நம்மாழ்வார்,

"தென்ன தெனவென்று வண்டுமுரல் திருவேங்கடத்து
என்னனை என்னப்பன் எம்பெருமான் உளனுகவே"

என்றும்; திருமங்கை மன்னன், [திருவாய்மொழி 3-9-1]

"கைம்மான மழகளிற்றைக் கடற்கிடந்த கருமணியை
மைம்மான மரதகத்தை மறையுரைத்த திருமாலை
எம்மானை யெனக்கென்று மினியானைப் பனிகாத்த
வம்மானை யான்கண்ட தணிநீர்த்தென் னரங்கத்தே"

[திருமொழி 5-6-1]

என்றும்; எம்பெருமானை முற்றுவமையாற் கூறியது கண்டு தெளிக.

கம்ப நாட்டாழ்வார் தாமியற்றிய இராமாவதாரத் தொடக்கத்தில் ஆழ்வார் துதியாக

"தருகை நீண்ட தயரதன் றன்றரு
மிருகை வேழத் திராகவன் றன்கதை
திருகை வேலைத் தரைமிசைச் செப்பிடக்
குருகை நாதன் குரைகழல் காப்பதே."

எனவமைத்துப் பாடியதின் தத்துவத்தை நன்குணரல் வேண்டும்.

ஆரணநூல் வழிச் செவ்வை யழித்திடு மைதுகர்க்கோர் வாரணமா யவர் வாதல்லிகள் மாய்த்த பிரானே ஏரணி கீர்த்தி இராமாநுசமுனி. ஆழ்வார், எம்பெருமானர், தூப்புல் வள்ளலார் என்ற மூவருமே ஒருருவாய்த்திகழ்கின்ற நம் அழகியசிங்கர், கருடனுருவா மறையின் பொருளாங் கண்ணன் கரி கிரிமேனின்றனைத்தும் காக்கின்ற வாறு, வேதவெற்பனின் அடியார்களை அநுக்ரஹிப்பாராக. வாழ்க உலகெலாம். பொங்கும் மங்களம் எங்குந் தங்குக.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

## 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌶𑌠𑌕𑍋𑌪𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌵𑌿𑌜𑌯𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌃 ।

---

[ வித்வாந் ஸ்ரீ உப. வே. ஸ்ரீநிவாஸதாதாசார்யர் ]

𑌶𑍍𑌰𑍀𑌮𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌭𑍁𑌪𑌦𑌕𑌮𑌲𑌾𑌰𑌾𑌧𑌕𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌮𑌸𑍍𑌯
𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍𑌛𑍍𑌰𑍀𑌵𑌣𑍍𑌶𑌠𑌾𑌰𑍇𑌰𑍍𑌯𑌤𑌿𑌶𑌤𑌮𑌖𑌿𑌨𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌠𑍇𑌽𑌹𑍋𑌬𑌿𑌲𑍀𑌯𑍇 ।
𑌆𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌪𑌰𑌿𑌗𑌣𑌿𑌤𑌮𑌹𑌾𑌭𑌦𑍍𑌰𑌪𑍀𑌠𑍇𑌽𑌭𑌿𑌷𑌿𑌕𑍍𑌤𑌃
𑌜𑍀𑌯𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌕𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌜𑌯𑌤𑌿𑌨𑍃𑌪𑌤𑌿𑌰𑍍𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍈𑌰𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌯𑌪𑌾𑌦𑌃 ॥ (1)

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌙𑍍𑌗𑌶𑌠𑌾𑌰𑌿𑌨𑌾𑌮𑌯𑌤𑌿𑌰𑌾𑌡𑌾𑌜𑌾𑌨𑌶𑍁𑌦𑍍𑌧𑌾𑌶𑌯𑌃
𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑍈𑌰𑍍𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑍍𑌭𑌿𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑌹𑌿𑌤𑌵𑌿𑌧𑌿𑌂 𑌚 𑌯𑌥𑌾𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌨𑌿𑌜𑍈𑌃 𑌕𑌰𑍍𑌮𑌭𑌿𑌃 ।
𑌶𑍂𑌰𑌾𑌯𑍈𑌵 𑌰𑌾𑌮𑌾𑌵𑌤𑌿𑌂 𑌨𑌰𑌹𑌰𑍇𑌰𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑍍𑌪𑌦𑍇
𑌸𑍍𑌵𑍀𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌶𑍍𑌰𑌮𑌂 𑌵𑌿𑌜𑌯𑌤𑍇 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿 𑌜𑌯𑌤𑍁 𑌮𑌾𑌧𑌵𑌃 ॥ (2)

𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌾𑌯𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌕𑍃𑌤𑍌 𑌨𑍍𑌯𑌾𑌯𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍇 𑌚𑌾𑌨𑌨𑍍𑌯𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌬𑍋𑌧𑌯𑍁𑌕𑍍 ।
𑌰𑌙𑍍𑌗𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍𑌛𑌠𑌾𑌰𑌿𑌂 𑌮𑍁𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌂
𑌦𑍇𑌵𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑍍𑌜𑌙𑍍𑌗𑌮𑌂 𑌨𑍌𑌮𑌿 𑌮𑍁𑌦𑍍𑌯𑍁𑌤𑌾 ॥ (3)

𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌪𑌾𑌦𑌜𑌨𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌵𑌾𑌦𑌰𑍋
𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌦𑌿𑌮𑌵𑌣𑍍𑌶𑌠𑌾𑌰𑌿𑌯𑌤𑌿𑌰𑌾𑌟𑍍𑌪𑌾𑌦𑌾𑌬𑍍𑌜𑌵𑌿𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌧𑌧𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌰𑌹𑌸𑍍𑌯𑌜𑌾𑌤𑌮𑌹𑌿𑌮𑌵𑌤𑍍𑌰𑍀𑌤𑌾𑌦𑌿𑌬𑍋𑌧𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌃
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌙𑍍𑌗𑌶𑌠𑌾𑌰𑌿𑌨𑌾𑌮𑌯𑌤𑌿𑌰𑌾𑌡𑍍𑌵𑌾𑌗𑍍𑌭𑍍𑌯𑍋 𑌗𑍁𑌣𑍀𑌭𑍂𑌤𑌯𑍇 ॥ (4)

𑌕𑌶𑍍𑌚𑍇𑌤𑌾𑌦𑌿𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌰𑌙𑍍𑌗𑌵𑌰𑌦𑌂 𑌸𑌂𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌮𑌹𑌾𑌃
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌙𑍍𑌗𑌶𑌠𑌾𑌰𑌿𑌭𑌵𑍍𑌯𑌯𑌤𑌿𑌰𑌾𑌟𑍍 𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌷𑍍𑌯𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌦𑌃 ।
𑌶𑌿𑌷𑍍𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌦𑌿𑌶𑌨𑍍 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌕𑌰𑍁𑌣𑌯𑌾 𑌜𑍀𑌵𑍇𑌚𑍍𑌛𑌤𑌂 𑌵𑌤𑍍𑌸𑌰𑌮𑍍
𑌵𑌿𑌦𑍍𑌵𑌦𑍍𑌵𑍃𑌨𑍍𑌦𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌕𑌮𑌲𑍋 𑌮𑌾𑌤𑌾𑌮𑌹𑌦𑍃𑌷𑍍𑌟𑌸𑌦𑍍𑌵𑍀 ॥ (5)

𑌸𑌦𑍍𑌵𑍇𑌦𑍍𑌯𑌾𑌦𑌿𑌮𑌵𑌣𑍍𑌶𑌠𑌾𑌰𑌿𑌮𑍁𑌨𑌿𑌰𑌾𑌡𑍍𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌸𑌂𑌰𑌕𑍍𑌷𑌯𑌾
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌯𑌾𑌮𑍁𑌨𑌾𑌦𑍍𑌯𑌪𑌰𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌪𑌾𑌲𑌿𑌤𑌮𑍍 ।
𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑌰𑌿𑌵𑌾𑌹𑌯𑌨𑍍 𑌵𑌿𑌜𑌯𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌕𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌜𑍋
𑌯𑍋𑌗𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 𑌕𑌰𑍁𑌣𑌾𑌸𑍁𑌧𑌾𑌂 𑌨𑍃𑌹𑌰𑍇𑌰𑌾𑌰𑌕𑍍𑌷𑌣𑌵𑍀𑌕𑍍𑌷𑌾𑌦𑍃𑌤𑌃 ॥ (6)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ (7)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ (8)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ (9)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ (10)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ (11)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ (13)

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ (15)

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ (16)

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ (17)

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ (19)

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ (20)

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# செய்திகள்

## (1)

## ஸ்ரீ அழகியசிங்கரின் சோளதேச யாத்ரை

[ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வாந். ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர்.]

ஸ்ரீ அழகியசிங்கர் கோனேரி ராஜபுரத்தி லெழுந்தருளி யிருக்கும் பொழுது "மடலெடுத்த நெடுந்தெங்கின் பழங்கள்வீழ, மாங்கனிகள்திரட் டுருட்டாவருநீர் பொன்னி, திடலெடுத்து மலர்ச்சுமந்தங் கிழியும்" என்று திருமங்கையாழ்வாரால் கொண்டாடப்பட்ட காவிரிநதியின் கரையிலிருக்கும் கல்யாணபுரம் என்கிற அக்ர ஹார வாஸிகளான, சில ஸ்ரீ வைஷ்ணவர்கள் வந்து ஸ்ரீ அழகியசிங்கரை அனேகம் தடவை ஸாஷ்டாங்கமாக தண்டன் ஸமர்ப்பித்து ஸ்ரீ சிங்கவேழ்குன்றத் தெம்பெருமானோடு கல்யாணபுரத் தக்ரஹாரத்திற்கெழுந்தருளி "அடியோங்கள் செய்யும் கிஞ்சித் காரத்தைத் திருவுள்ளம்பற்றி அடியோங்களையும் க்ருதார்த்தராய்ப் பண்ணி யருளவேண்டும்" என்று ப்ரார்த்திக்க, ஸ்ரீ அழகியசிங்கரும், குற்றமின்றி குணம் பெருக்கி குருக்களுக் கனுகூலராயிருக்கும் அவ்வந்தணர்களுடைய நற்குணங்களுக் குகந்து 'அப்படியே செய்கிறோம். அவ்வக்ரஹாரத்தில் ஆழ்வார்களால் மங்களாசாஸநம் பண்ணப்பட்ட வெம்பெருமா னெழுந்தருளி இருக்கிறானோ' வென்று கேட்டருள, அவ் வைஷ்ணவர்கள், 'ஆழ்வார்களால் மங்களாசாஸநம் பண்ணப்பட்ட வெம்பெருமானில்லாவிட்டாலும் ஆழ்வார்களுடைய திருவுள்ளத்தை யடியொற்றி நடக்கையாலே அவர்களோடு துல்யசீலர்களென்று சொல்லலாம்படியாய் நம் பூர்வாசார்யர்களான மண்ணில் மிகு மறையவர்களால் மங்களாசாஸநம் பண்ணப்பட்ட வெம்பெருமான் அநாதிகாலமாக வெழுந்தருளி இருக்கிறான். அதுநிற்க, உற்றது முள்ளடியார்க் கடிமை என்றருளிச் செய்த திருமங்கையாழ்வார் "இளம்படி நற்கமுகு குலைத்தெங்கு கொடி சென்னெல் ஈன்கரும்பு கண்வளர கால்தடவும் புனலால் வளங் கொண்ட பெருஞ்செல்வம்" என்றும், "மாறுத மலர்க்கமலம் செங்கழுநீர் ததும்பி மதுவெள்ள மொழுக வயலுழவர மடையடைப்ப, மாறுத பெரும்செல்வம் வளரும்" என்றும் அருளிச் செய்தபடியே பாகவதா ராதனத்துக்கே உபயுக்தங்களான, கல்யாண வஸ்துக்கள் நித்யமாக நிறைந்திருக்கும் நன்னிலமாய் நித்ய ஸ்ரீயோடிருக்கையாலும் "முறையால் வளர்க்கின்ற முக்தியர் நால்வேதர் ஐவேள்வி யாறங்கந் ஏழிசையோர் மறையோர்" என்னும் "உண்மை மிகுநற் கலைகள் நிறைபொறைகள் உதவுகொடை என்றிவற்றி. னெழிவில்லாப் பெறிய வண்மைமிகு மறையவர்கள்" என்றும் அருளிச்செய்தபடியே ஞானம், பக்தி, வைராக்யம், தர்மானுஷ்டானம் முதலிய ஸர்வ கல்யாண குணங்களுக்கு மிருப்பிடமாய் ஸ்ரீ அகோபிலமடம் 24-வதாஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருக்கிற ஸ்ரீ பராங்குச ராமானுஜ யதீந்திர மகா தேசிகன் ஸ்ரீ வெ. வித்வான் கவிதார்க்கிக ஸிம்மாசாரியர் முதலிய வானுடுகந்த மண்ணில் மிகு மறையவர்கள் அங்கு மலிந்திருக்கிறபடியினாலே அவ் வக்ரஹாரத்திற்கு கல்யாண புரமென்று ப்ரஸித்தமான பெயருண்டாயிற்றென்று பெரியோர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறோம்' என்று விண்ணப்பம் செய்ய, "அவ் விஷயத்தைக் கேட்டருளின ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம் மிகவு முகந்து, 'அப்படி கல்யாண குணங்கள் நிறைந்த பெரியோர்க ளெழுந்தருளி இருக்கிற இடமானால் "நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்க ளுழக்கிய பாததூளி படுதலா லிவ்வுலகம் பாக்கியம் செய்ததே" என்றும், "கருந்தட முகில்வண்ணனைக் கடைக்கொண்டு

கைதொழும் பக்தர்களிருந்த வூரிலிருக்கும் மானிட ரெத்தவங்கள் செய்தார் கொலோ " என்றும் சொல்லுகிறபடியே, அது அம்மகா புருடர்களுடைய திருவடி தூளி ஸம்பந்தம் பெற்றதாகையினால் பிற்காலத்தி லங்கு வஸிக்கிறவர்களுக்கும் பாக்கியத்தை தரக்கூடிய புண்ணிய பூமியன்றோ ! ஆகையினாலன்றோ, ஸ்ரீ தேசிகன் " வானாடுகந்தவர் வைய்யத் திருப்பிடத்தை கானுரி மயமும் கங்கையும் காவிரியும் கடலும் நாநாநகரமும் நாகமும் கூடிய நன்னிலமே " என்று ஸர்வ புண்ணிய க்ஷேத்ரங்களுக்கும், ஸமாதானமாக அருளிச் செய்திருப்பது. ஆகையால் அவசியம் சிங்கப்பிரானை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வருகிறோம்' என்றருளிச் செய்து உடனே ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மனுடைய ஸர்வபரிஜனங்களோடும் பரிச்சதங்களொடும் புறப்பட்டு அக்கல்யாணபுரத்தைக் குறித்து எழுந்தருளி நோக்கும் பக்கமெல்லாம் கரும்பொடு செங்கெவோங்கு செந்தாமரையாயிருக்கும் அவ்வூரினருகே எழுந் தருளினவாறே, சிங்கவேழ்குன்றத் தெம்பெருமானுடைய திருச்சின்னவோசை யைச் செவியுற்ற அக்கல்யாணபுரத்தக்ரகார வாஸிகளான வைஷ்ணவர்களனை வர்களும். " மாக வைகுந்தம் காண்பதருக்கென்மனம் ஏகமெண்ணு மிருப் பகலின்றியே " என்பதுபோல நெடுங்காலமாகக் கண்டனுபவிக்க வாசைப்பட்ட நம் சிங்கப்பிரான் நிறைவொன்றுமிலாத நீசர்களான நாமிருக்குமிடந்தேடி வந்தருளினன் என்கிற வானந்தம் உள்ளடங்காமையாலே " அனைத்துலகங் காக்கு மருளாளர் வந் தார், நம்மை யடைக்கலங் கொள்ளும் நாதர்வந்தார், தருமவழி யழியாமற் காப்பார் வந்தார், தாமரையாளுட னிலங்கும் தாதைவந்தார், தேசொத்தார் மிககாரு மிலாதார் வந்தார் " என்று ஸ்தோத்திரம் பண்ணுவார்களும் பக்தியினுடைய ப்ரவாகத்தின் பெருக்கினால், ஓடுவார் விழுவார் உகந்தாலிப்பார் நாடுவார் நம்பிரானெங் குற்ரு னென்பார், பாடுவார்களும் பல்பறை கொட்டநின் றுடுவார்களுமாய், இணையில்லா யின்னிசைகளோடு கூடிய துந்துமி வீணை வேணு ம்ருதங்கம் பணவம் முதலிய பற்பல வாத்யங்களோடும், பறவை கதிறைபோல் முழங்கும் நான்கு விதங்களான வேதங்களுடைய கோஷங்களோடும் நற்குணங்கள் நிறைந்த ஸ்தோத்ர வசனங்க ளோடும், புண்ணிய தீர்த்த ஸம்பூரணங்களான பூர்ண கும்பங்களோடும், அச்சிங்க வேழ்குன்றத் தெம்பெருமானையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் எதிர்கொண்டு ஸாஷ் டாங்கமாகப் பலதடவை தண்டன்ஸமர்ப்பித்து வாயார வாழ்த்தி வலம்செய்து பின்செல்ல, ஸ்ரீ அழகியசிங்கர் அங்கே ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்மன் எழுந்தருளும் திருவீதி யில், சந்தனநீர் தெளித்து விசித்திரங்களான ரங்கவல்லிகளினு லலங்கரிக்கப்பட் டிருக்கிற வழகையும், திருவீதி இருபுரமும் பழக்குலைகள் நிறைந்த விளங்கமுகு கதளிகளாலும் அதி மனோஹரங்களான மாந்தளிர்களாலும் பரிமளம் மிகுந்த செண் பகம்; மல்லிகை, தாமரை செங்கழுநீர் இருவாக்ஷி முதலிய பலவிதங்களான புஷ்பங் களினாலும் பற்பல தோரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டதாய், " தீர்த்தங்கள் நிறைந்த பூர்ண பொற்குடங்கள் மங்கள் தீபங்கள் வாஸநா தூபங்கள் நிறைந்த திண்ணைகளினு லழகிய திருமாளிகைகள் தோறும் மதிமுக மடந்தையர்கள் கீதம்பாடி யாறத்தி எடுக்க, தேங்கொடு மாங்கனிக் கதளிகள் கைக்கொண்டு பார்ப்பன சிட்டர் கள் பல்லாண்டெடுத் தேற்ற, இவ்வுபசாரங்களை எல்லாம் கண்ணாரக் கண்டு ஸாந்துஷ்டராய், ஸ்ரீ பராங்குச ராமானுஜ யதீந்திர மகாதேசிகனுடைய திருவம்சத் தார்களான ஸ்ரீ உ. வே. சக்ரவர்த்தி யாசாரியர் முதலியவர்கள் அவ் வழகியசிங்கர் முன் யெழுந்தருளி இருக்கிற திருமாளிகையிலேயே எம்பெருமானோடு எழுந்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்தபடி ஸ்ரீ சிங்கப்பிரானோ டங்கு எழுந்தருள அந்தச் சக்ரவர்த்தி யாசாரியரும் நித்யசூரி ஸேவ்யனான வெம்பெருமான் நிஹீநதமனான தன்னுடைய கிருஹத்துக்கு எழுந்தருளினதை முடவன் தலையில் விழுந்த கங்கை யைப் போல் பாவித்து அதிக ஸந்துஷ்டராய், முன்னம் மாலாகார க்ருஹத்துக்கு எழுந்தருள ஸ்ரீ க்ருஷ்ணனையும் ஸ்ரீ பலராமனையும்,

“ வூஸாஃவாஸாளே நாயள 33 ரெஹாஊவா மதள |
யநெ்ாஹவெவுயிஷ்ாஜீத்ாஹ ராயெ்ாவஜீவநஃ ||”

என்கிறபடியே ஸ்ரீ மாலாகாரர் தன்னுடைய ஸர்வ சொத்துக்களையும் ஸமர்ப்பித்து ஆராதித்ததுபோல, முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தலா லலங்க்ருதமான க்ருஹத்தில் விசித்திர புஷ்பாலங்க்ருதமான வெள்ளி மண்டபத்தில் சிங்கப்பிரானை எழுந்தருளப் பண்ணி வைத்து, “சந்தன புஷ்ப தூப தீப தாம்பூல பழவர்க்கங்களினாலும் ஆமின் சுவையவையாறோடு கூடிய அடிசிலாலும் ஸ்ரீ அழகியசிங்கரையும் அங்கெழுந்தருளின அளவிறந்த ஸ்ரீ வைஷ்ணவர்களையும், “ரெநவாயொய்ாம் மஷிஷ்ாஜோ நவ யாஸ்ாஜ ஷுணகாநு” என்று பரத்வாஜரிஷி ததியாராதனத்தில் திருப்தியடைந்த ஸ்ரீ பரதஸேனா ஜனங்கள் சொன்னதுபோல கொண்டாடும்படி யதோசிதமாக ஆராதித்தார். அப்படியே அவ்வக்ரகார வாஸிகளான மற்றும் ஸ்ரீ வைஷ்ணவர்களும் 4 தினங்களில் சிங்கப்பிரானை ஆராதித்த ப்ரகாரங்களும் வர்ணிக்கமுடியாதபடியே இருந்தது.

இப்படி அவ்வக்ரஹார வாஸிகள் சிங்கப்பிரானை ஆராதித்து பிறகு ஸ்ரீ அழகிய சிங்கர், அவர்களுடைய பக்தியின் பெருமைக்கு போறவுகந்து, ஸ்ரீ கண்ணபிரானுடைய டோலோத்ஸவ ஸமயத்தில், அவ்வக்ரகாரவாஸிகளான வைஷ்ணவர்களை அழைத்து அவர்களுக்கு ஞானம் அநுஷ்டானம் பகவத் பக்திகளின் வ்ருத்திக்கு ஹேதுவாயிருக்கும்படியான ஓர் உபந்யாஸத்தைச் செய்தருளினர்- தேனும் பாலும் நெய்யும் கன்னலு மமுதும் கலர்ந்ததற்கு ஸமானமான அவ்வினிய சொல்லழகையும் பொருளழகையும் கேட்டு ஸர்வ ஜனங்களும் ஸந்தோஷமடைந்தார்கள்.

---

## (2)

## மன்னார்குடி ஸதஸ்

[ ஸ்ரீ. உப. ராமஸ்வாமி ஐயங்கார் ]

ஸ்ரீ கண்ணபிரானுடைய நித்ய வாஸஸ்தலமாகையாலே தக்ஷிணத்வாரகை என்று ப்ரஸித்தமான மன்னார்குடியில் நாளது வ்ருஷவு பங்குனி மாஸத்தில் ஸ்ரீராஜகோபாலனுடயை ப்ரம்மோத்ஸவத்தில், கோட்டூர் ஸ்ரீமான் ரங்கஸ்வாமி முதலியார் அவர்களால் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட வித்வத் ஸபையானது அவருடய வம்சத்தினரான ஸ்ரீமான் பாலக்ருஷ்ண முதலியார் அவர்களால் பங்குனிமீ 2-ம் தேதி முதல் ஆரம்பித்து நடத்தப்பட்டது. ஷை ஸபைக்கு ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் புந்தங் கோட்டகம் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸாசாரியர், இராமனதபுரம் ஸம்ஸ்தானம் தமிழ் வித்வான் ஸ்ரீ உ. வே. இராகவய்யங்கார், கும்பகோணம் அக்னிஹோத்திரம் ஸ்ரீ உ. வே. வித்வான் ராமானுஜதாதாசாரியார், மன்னார்குடி பாடசாலை உபாத்யாயர் ஸ்ரீ உ. வே. வித்வான் சேஷாசாரியர், தமிழ் பண்டிதர் ஸ்ரீமான் ஸேதுப் பிள்ளை அவர்கள், ஸ்ரீமான் ஞானனந்த ஸ்வாமிகள் முதலான அனேகம் பண்டிதர்கள் வந்திருந்தார்கள்.

ஷை பண்டிதர்களால் தினந்தோறும் பகல் 4 மணிக்கு வழக்கம்போல பற்பல உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. அவ்வுபந்யாஸங்களைக்கேட்டு வந்திருந்த ஸர்வ ஜனங்களும் ஸந்தோஷித்தார்கள். இந்த வருஷத்தில் ஸபையின் அத்யக்ஷர் ஸ்ரீமான் பாலக்ருஷ்ண முதலியார் முதலிய அனேக பிரபுக்கள் கேட்டுக்கொண்டபடி ஸ்ரீ அகோபில மடம் ஆஸ்தான வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸாசாரி

யார் ஸ்வாமியினால் தினந்தோறும் காலை 9-மணி முதல் 11-மணி வரையிலும் 8 தினங்களிலும் ஸ்ரீ பகவத் கீதை விஷயமான உபந்யாஸம் செய்யப்பட்டது, அக்காலங்களில் தினந்தோறுப் ஷை ஸ்ரீ உ. வே. இராகவய்யங்கார் முதலான அனேக வித்வான்களும் ஸ்ரீமான் பாலக்ருஷ்ண முதலியார் முதலிய அனேக பிரபுக்களும் மற்றும் நான்கு வர்ணத்தார்களான அனேக புருஷர்களும், ஸ்திரீஜனங்களும் வந்திருந்தார்கள். ஷை ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமி, 'இந்த பகவத் கீதையை அடி முதல் முடிவு வரையில் உபக்ரமம் உபஸம்ஹாரம் முதலிய ஆறு விதங்களான தாத்பர்யலிங்கங்களைக்கொண்டு நன்கு பராமர்சித்தால் இது அவைதிக மதங்களான புத்தஜின ஸாங்க்ய காணாத மதங்களுக்கு ஸர்வவிதத்தினாலும் பொருந்தாதிருப்பது போல, வைதிகமதங்களுக்குள்ளும் ஜீவேச்வரர்களுக்கு அபேதத்தையும் ஜீவர்களுக்கும் பரஸ்பரம் அபேதத்தையும் சொல்லுகிற மதத்திற்கும் இது பொருந்தாது என்கிற விஷயத்தை அம்மதாசார்யருடைய வ்யாக்யான க்ரந்தங்களிலிருந்தே வ்யக்தமாக காணலாம்' என்று சொல்லி அந்த க்ரந்தங்கள் பொருந்தாதிருப்பதை பற்பல வாக்யங்களை எடுத்து வ்யக்தமாகக் காட்டினதோடு, இந்தக் கீதையானது விசிஷ்டாத்வைத மதத்திற்கு நன்றாகப் பொருந்தி இருக்கிறபடியையும் கீதையின் வாக்கியங்களைக் கொண்டு வ்யக்தமாகக் காட்டினார். இதிருக்க, 'இந்த கீதையில் பிராமணன் முதலிய நான்கு ஜாதிகளையும் பிறவியினாலுண்டானதாகவே பற்பல விடங்களில் சொல்லுவதாலும், ஜாதிகளின் கலப்பை நரக ஹேதுவாக வ்யக்தமாகச் சொல்லுவதாலும், அந்தந்த ஜாதி மனிதன் ஸ்வஜாதி தர்மங்களை விடக்கூடாதென்பதையே ஸ்ரீ க்ருஷ்ண பகவான் தன்னுடைய உத்தமமான நிச்சிதமான மதமாகச் சொல்லுவதாலும், அவரவர்கள் தம் தம் ஜாதி தர்மங்களை அனுஷ்டித்தே ஈச்வரனை ஆராதிக்க வேண்டுமென்று சொல்லுவதாலும், ஸ்வதர்மானுஷ்டானத்திற்கு முக்கியமாக சௌசம் (தீண்டாமை) அவசியம் வேண்டுமென்பதையும் இந்தத் தீண்டாமை யில்லாது ஒழித்தவனை ஸ்ரீ க்ருஷ்ணன் நரகத்துக்கு அனுப்புவதாகவும் தீண்டாமையாகிற சௌசாசாரமுள்ளவனுக்கே மோக்ஷமளிப்பதாகவும் சொல்லுவதாலும், இந்தக் கீதையில் 'மனிதன் சாஸ்திரங்களிற் சொல்லி இருக்கிறபடியே நடக்கவேண்டுமென்றும் சாஸ்திர விருத்தமாக நடக்கக் கூடாதென்றும் வ்யக்தமாகச் சொல்லி இருப்பதாலும், அனுகீதையில் சிகை யில்லாதவர்களை ஈச்வரன் சிக்ஷிப்பதாகச் சொல்லி இருப்பதாலும், தத்காலத்திய சில நாகரிகர்கள் ஜாதிபேதங்களையும் தீண்டாமையும் ஒழித்து எல்லா மனிதர்களையும் ஒரே ஜாதியாக ஆக்கிவிட ப்ரயத்நப்படுவதும் தீண்டாமையை ஒழிக்க நினைப்பதும் கீதைக்கு மிகவும் விருத்தமானது என்பதையும், நாகரிகர்கள் மனது தோன்றினபடி எல்லாம் சொல்லிக்கொண்டு இவை எல்லாம் கீதையிலிருக்கிறது என்று சொல்வது மிகவும் தப்பானது என்றும், கீதையில் இவர்கள் சொல்லுகிற விபரீதங்கள் இல்லவே இல்லை என்பதையும், 8 தினங்களிலும் மிகவும் தெளிவாக ப்ரமாண வசனங்களோடும் பலவிதங்களான யுக்திகளோடும் உபந்யஸித்தார். அதைக் கேட்டிருந்த ஸர்வஜனங்களும் விஸ்தாரமாயும் தெளிவாகவுமிருந்த ஷை உபந்யாஸத்தை கேட்டு ஸந்தோஷித்தார்கள்.

---

(3)

## ஸ்ரீபாதுகா ஸஹஸ்ர மஹோத்ஸவம்.

நிகழும் சித்திரைமீ 13௳ சனிக்கிழமை முதல் 19௳ வெள்ளிக்கிழமை பர்யந்தம் ஸ்ரீ பெருமாள்கோயில் ஸ்ரீ தூப்புல் ஸந்நிதியில் ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ர மஹோத்ஸவமென்று ஓர் மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு தினத்திலும் பூர்வாஹ்நத்தில் வேதபாராயணமும் ஆழ்வார் பாசுரங்களின் ஸேவையும்,

அபராஹ்நத்தில் வித்வான்களின் உபந்யாசங்களும், அஸ்தமயாத்பரம் ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ர ச்லோகங்களின் அர்த்த விவரணமும் நடைபெற்றன. ஸ்ரீ உப. திருக் கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உப. ஐயா க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உப. வெங்டாத்ரிஹரம், அநந்தாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உப. தி. இ. வீர ராகவாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உப. தொட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உப. திருப்பதி நீலமேகாசார்ய ஸ்வாமி முதலிய வித்வாங்களும், ஸம்ஸ்க்ருத தமிழ்வேதங் களை ஸாங்கம் அத்யயநம் செய்திருக்கும் அநேக வைதிகோத்தமர்களும் ப்ரதிதிநமும் ஸந்நிஹிதர்களாயிருந்து கோஷ்டியை அலங்கரித்து வந்தார்கள். அநேக லௌகிக ஆஸ்திகர்களும் இந்த உத்ஸவத்தில் மிகக் ச்ரத்தையுடனும் யதாசக்தி அந்வயித்து உத்ஸவத்தைச் சிறப்புடன் நடத்திவந்தார்கள். ப்ரதிதிநமும் ஸ்ரீ தூப்புல் ஸந்நிதி யில் ததீயாராதநமும் விசேஷமாக நடந்தது. அர்ச்சாவதாரமாக அவ்விடத்தில் எழுந் தருளியிருக்கும் ஸ்ரீ தேசிகனும், ஸத்வோத்தரமாயும் ஹார்த்தமான பக்தியுடனும் செய்யப்பட்ட இந்த மஹோத்ஸவத்தைக் கண்டருளி திருவுள்ளம் உகந்தானென்றே நாம் நம்புகிறோம். ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ர ச்லோகங்களை ச்லோகம் ச்லோகமாக ஸேவித்து அவைகளின் அர்த்தத்தை விவரணம் செய்தது முழுவதும் ஸ்ரீ திருக் கோட்டியூர் ஸ்வாமியின் கைங்கர்யமாகவே இருந்தது. அந்த அர்த்த விவரணத்தின் பெருமை அநுபவைக வேத்யம். பண்டித பாமரர்களெல்லாரும் அதைக்கேட்டு மிக்க ஆநந்தத்தை அடைந்தார்கள்.

இம்மாதிரி உத்ஸவங்களை நடைபெறுவித்து அவைகளால் உண்டாகும் ஆநந்தத்தைத் தாம் அநுபவிக்கவேண்டும், மற்றவர்களையும் அநுபவிப்பிக்கவேண்டும் என்றும் தோற்றம் முதல் முதலில் உதித்தது மஹாபாக்யசாலியான ஸ்ரீ உ. வே. வி. ஸ்ரீநிவாச ஐயங்கார் ஸ்வாமி ஹ்ருதயத்திலேயே. சென்ற வருஷத்தில் ஸ்ரீ ராமாநுஜ தயாபாத்ர உத்ஸவத்தை ஆரம்பித்து அவர் நடத்தின வைகரி எல்லாருக்கும் தெரியும். பிறகு தயாசதக உத்ஸவம் என்று ஒரு மஹோத்ஸவத்தைச் சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள் ஸ்ரீ தேசிகன் இவர்களுடைய ஸந்நிதியில் பெருத்த வைப வத்துடன் செய்வித்தார். அவருடைய பாக்யமே பாக்யம்.

---

## (4)

## ஸ்ரீ பாஷ்ய பரீக்ஷை

ஸ்ரீ அழகிய சிங்கர் தேவனூர்விளாகக் கிராமத்தில் சென்ற பங்குனிமீ 30வ முதல் எழுந்தருளியிருக்கும் விஷயம் ப்ராயேண எல்லாருக்கும் தெரியும். அந்த ஸந்நிதியில் ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபம் செய்துவரும் வித்வான்களுக்குச் சென்ற மூன்று மாஸகாலமாகக் காலக்ஷேபம் செய்யப்பட்ட பாகத்தில் ஒரு பரீக்ஷை சென்ற வாரத்தில் நடந்தது. அதில் நிஷ்பத்தி அடைந்த வித்வான்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 30 வரையில் ஸம்மாநம் செய்யப்பட்டது. இவ்விதமாக ஒவ்வொரு மூன்று மாஸ முடிவிலும் பரீக்ஷை நடத்தி தகுந்த ஸம்மாநத்தைச் செய்யவேண்டுமென்று ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளம்பற்றி யிருப்பதாகத் தெரிகின்றது. இது மிகவும் ச்லாக்யமான பரிபாடியே.

பரீக்ஷையில் தேறியவர்களின் பெயர் :— (1) மெ. நரஸிம்ஹாசார்யர், (2) ப. ராகவாசார்யர், (3) பா. கோபாலாசார்யர், (4) அ. கிருஷ்ணமாசார்யர், (5) ஸம்பத்குமார வரதாசார்யர், (6) தி. வாஸுதேவாசார்யர், (7) அ. ஸாரநாதா சார்யர், (8) கு. ராமபத்ராசார்யர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவராஹரூபிணே நம:

யோऽந்த: ப்ரவிச்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலசக்திதர: ஸ்வதாம்நா |
அந்யாம்ச்ச ஹஸ்தசரணச்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ||

## ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஜகத்தின் க்ஷோபம்

ஸ்ரீமந் நாராயணனுடைய விசித்ரங்களான சேஷ்டிதங்களைப் பற்றி கேவலம் பசு ப்ராயர்களான நாம் என்ன சொல்லக் கூடும்? பராவரதத்வ வித்தான ஸ்ரீபராசர மஹர்ஷியே, நிர்மலமாயிருக்கும் ஆகாசத்தில் க்ஷணமாத்ரத்தில் இருண்ட பெரிய மேகங்கள் உதயமாவதையும், விஸ்தீர்ணமாய்க் கொந்தளிக்கும் ஸமுத்ரம் எவ்வித அணையுமிராத பூமிக்கு அடங்கி நிற்பதையும், ஜகத்திற்கெல்லாம் எப்பொழுதும் அளவற்ற ஆஹ்லாதத்தை ஜநிப்பிக்கும் சந்த்ரன் அதிதுக்ககரமான விஷயத்தை அடைவதையும், மேரு முதலான பெருத்த மலைகளையும் புரட்டக்கூடிய ஜஞ்ஜ்ஜா மாருதங்கள் திடீரென்று ஆவிர்ப்ப விப்பதையும், மின்னற்கொடிகள் ஒரு திக்கிலிருந்து மற்றொரு திக் பர்யந்தம் நீண்டு ஆகாசம் முழுவதையும் க்ஷணமாத்ரம் ப்ரகாசிப்பித்துக் கொண்டு உத்தர க்ஷணமே இருந்தவிடம் தெரியாமல் மறைவதையும், ஸூர்யன் ஆகாச மார்க்கமாக ப்ரதிதிநமும் ஒரு க்ஷணமும் தவறாமல் நிர்த்திஷ்ட காலங்களில் உதயாஸ்தமயங்களை அடைந்து ஸதா ஸஞ்சரிப்பதையும் பார்த்து, அளவற்ற வியப்படைந்து,

“மேகோதய: ஸாகரஸந்நிவ்ருத்தி-
ரிந்தோர்விபாக: ஸ்புரிதாநி வாயோ: |
வித்யுத்விபங்கோ கதிருஷ்ணரச்மே:
விஷ்ணோர்விசித்ரா: ப்ரபவந்தி மாயா: ||”

‘இவையெல்லாம் எவ்விடத்திலும் வ்யாபித்து நிற்கும் நமது சரண்யனுடைய அத்யாச்சர்ய கரங்களான சேஷ்டிதங்களன்றோ?’ என்று கதறியிருக்கிறார். அப்படிப்பட்ட ஸ்ரீமந்நாராயணனுடைய பெருமையை நாம் எவ்வாறு அறியக்கூடும்? “பஹு ஸ்யாம் ப்ரஜாயேய” என்று ஸங்கல்பித்து ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறான். அப்படி ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஜகத்தை பஹுப்ரகாரமாக ஸம்ரக்ஷிக்கிறான். பிறகு ஏதோ ஒரு ஸங்கல்ப முண்டாகித் தான் ஸ்ருஷ்டித்து ஸம்ரக்ஷித்துவந்த ஜகத்தையே ஸம்ஹரிக்கிறான். இது என்ன வ்யாபாரம்? அவனை யார் கேட்கிறது?

இப்பொழுது ஜகத்தில் நடைபெறும் ஸம்பவங்களைப் பார்த்தால், ஒருகால் ஸம்ஹார ஸங்கல்ப ரூபமான விசித்ர சேஷ்டிதத்தைச் செய்வதற்கு அவன் ஆரம்பித்து விட்டானோ வென்று நினைக்கும்படியாக இருக்கிறது. கோடிக்கணக்காக ப்ரதிதிநமும்

ஜநங்கள் கொல்லப்படுகிறார்கள். சொத்துக்கள் அளவுக்கு விஞ்சி நாசம் அடைகின்றன. கொல்லப்படாமல் ஜீவித்திருக்கும் ப்ரஜைகள் படும் துயரத்தின் கொடுமை மிகவும் அஸஹ்யமாகவே இருக்கின்றது. கருணாநிதியாக இருக்கும் பகவானுக்கு இம்மாதிரியான வ்யாபாரங்கள் எப்படிப் பொருத்தமடையும்? ஸர்வத்திற்கும் காரணமன்றோ அவன்? ப்ரஜைகளின் மநஸ்ஸில் இச்சையை ஜநிப்பித்து அது வழியாகத் தனது ஸங்கல்பத்தை அவன் ஸாதித்துக் கொள்கின்றான் என்று சாஸ்த்ரங்கள் சொல்கின்றன. இப்பொழுது ப்ரஜைகளின் மநஸ்ஸில் யுத்த புத்தியை ஜநிப்பிக்க வேண்டுமென்று ஸங்கல்பித்து விட்டானோ? நமது தேசத்திற்கே யுத்தம் வந்துவிட்டதே. ஸ்வல்ப காலம் முன் லங்கா த்வீபம் தாக்கப்பட்டது; வடக்கிலுள்ள நமது நகரங்களுள் இரண்டு நகரங்களில் குண்டுகள் வீசின. சென்ன பட்டணமும் தாக்கப்படுமோவென்று ஜநங்கள் பயந்தார்கள். கணக்கற்ற ஏழை ஜநங்கள் அம்மாதிரி பயந்து தமது வீடுவாசல்களை விட்டுவிட்டு, தலையில் மூட்டைகளும் இடுப்பில் குழந்தைகளுமாக ஸ்த்ரீகளையும் வ்ருத்தர்களையும் இழுத்துக் கொண்டு ஆஹாரத்திற்கு இடமிராமல் பட்டணத்திலிருந்து நாலு திக்குக்களிலும் திருவிழாவுக்குப் போவது போலக் கூட்டம் கூட்டமாகப் பத்துப் பதினைந்து தினங்களாக வெளிப்புறப்பட்டுப் போகிறார்கள். ஸர்க்கார் அதிகாரிகளும் யுத்த ஸந்நாஹார்த்தம், நூற்றுக்கணக்கான மோடார் லாரிகளில் துருப்புக்களை ஏற்றிக்கொண்டு பகலிலும் இரவிலும் கிழக்கிலிருந்து மேற்கிலும் மேற்கிலிருந்து கிழக்கிலும் பறக்கிறார்கள். எந்த க்ஷணத்தில் என்ன நேருமோ ஒன்றும் தெரியவில்லை. ஸ்ரீசரண்யனே கதி. இந்த ஸ்திதியில்,

> “ 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌖𑌲𑌃 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌾𑌂
> 𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌤𑍁 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌶𑌿𑌵𑌂 𑌮𑌿𑌥𑍋 𑌧𑌿𑌯𑌾 ”

என்று பக்தோத்தமர் ப்ரார்த்தித்த ப்ரகாரம் ப்ரஜைகளெல்லாரும் பரஸ்பர ஹிதைஷிகளாக நடந்து வருமாறு பகவான் ஸங்கல்பிக்க வேண்டுமென்று ஸதா அந்தப் பகவானை ப்ரார்த்திப்பதைத் தவிர்த்து வேறு கதி ஒன்றும் தெரியவில்லை.

* * * *

**ஸ்ரீமதுராந்தகம் பாடசாலை** ஸ்ரீமதுராந்தகப் பாடசாலை விஷயமாக மேற்கொண்டு செய்யப்படவேண்டிய கார்யங்களெல்லாம் யதாக்ரமம் செய்யப்பட்டு வருகின்றன. அநேக வித்யார்த்திகள் ப்ரார்த்தநா பத்ரங்களை அனுப்பி இருக்கிறார்கள். இந்த மாஸக் கடைசியில் அந்தப் பத்ரங்களெல்லாம் ஸ்ரீ அழகிய சிங்கரால் கடாக்ஷிக்கப்படும். வித்யா ப்ரவசநாதிகாரிகளும் சீக்ரத்திலேயே நியமிக்கப்படுவார்கள். கட்டடமும் வேலை நடந்து வருகின்றது. இந்த வஸந்த ருதுவிலேயே பாடசாலையை உபக்ரமிக்குமாறு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அநுக்ரஹிப்பனென்று நம்புகிறோம்.

* * * *

**ஜீவன்களின் ப்ரதம ப்ரவ்ருத்தி**

சென்ற ஸஞ்சிகையில், ஜீவாத்மாவின் ப்ரதம ப்ரவ்ருத்தி விஷயமாக நமது ஆசார்யர்கள் அநுக்ரஹித்துள்ள நிர்வாஹங்களைப் பற்றி ப்ரஸ்தாவித்து, 'அவர்களுள் ஐகமத்யமே இருக்கின்றது; அபிப்ராய பேதம் அவ்வளவாகக் காணப்படவில்லை' என்று சில பெரியோர்கள் சொல்வதை ஸங்க்ரஹித்து எழுதி யிருந்தோம். நமது பத்ரிகாபிமாநிகளுட் சிலர், ஏதோ ஸ்வல்ப அபிப்ராயபேதம் நமது ஆசார்யர்களுள் இருப்பதாகச் சங்கிப்பதற்கு ஹேதுக்களுண்டோ வென்று கேட்டிருக்கிறபடியால், அதைப்பற்றி மறுபடியும் ப்ரஸ்தாவிக்க ப்ராப்தமாகின்றது. பெரியோர்கள் க்ஷமிக்க வேணும்.

ஒவ்வொரு க்ரியையிலும் ஜீவன்களால் முதல் முதலிற் செய்யப்படும் ப்ரயத்நத்தை ப்ரதம ப்ரவ்ருத்தி என்றும் அந்த க்ரியை ஸம்பந்தமாக மேன்மேற் செய்யப்படும் ப்ரயத்நங்களை உத்தர ப்ரவ்ருத்திகளென்றும் வேதாந்திகள் வ்யவஹரிப்பார்கள். இது விஷயமாக ஸ்ரீ பாஷ்யத்தில் ஒரு வாக்யம் தென்படுகின்றது. "𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍁 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌸𑍁 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣 𑌕𑍃𑌤𑌂 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌮𑍁𑌦𑍍𑌯𑍋𑌗𑌮𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑍀 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌤𑌦𑌨𑍁𑌮𑌤𑌿𑌦𑌾𑌨𑍇𑌨 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑌿" [இதன் பொருள்: எல்லா க்ரியைகளிலும் ஜீவன்களாற் செய்யப்படும் உத்யோகத்தை அவலம்பித்தே அந்தர்யாமியாயிருக்கும் பரமாத்மா அதற்குத் தனது அநுமதியைக் கொடுத்து ஜீவனை ப்ரவர்த்திக்கிறான் என்பது தான்.] இதற்கு வ்யாக்யாநம் செய்கையில் ஸ்ரீ ச்ருதப்ரகாசிகாசார்யர், "𑌆𑌦𑍍𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌷𑌯𑌾𑌂 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨 𑌉𑌦𑌾𑌸𑍀𑌨𑌤𑍍𑌵𑌂 𑌅𑌵𑌗𑌮𑍍𑌯𑌤𑍇" [இந்த வாக்யத்திலிருந்து, ஜீவன் ஒரு க்ரியையில் முதல் முதலில் ப்ரவர்த்திக்கையில் பரமாத்மா உதாஸீநனாக இருக்கிறான் என்று தெரிகின்றது] என்று அநுக்ரஹித்திருக்கிறார். அதாவது 'ப்ரதம ப்ரவ்ருத்திகாலத்தில் ஜீவன் பரமாத்மாவின் அநுமதி இன்றிக்கே ஸ்வயமாகவே ப்ரவர்த்திக்கிறான்; உத்தர ப்ரவ்ருத்திகாலங்களில் பரமாத்மாவின் அநுமதியின் பேரிலேயே ஜீவனுக்கு ப்ரவ்ருத்தி ஏற்படுகின்றது' என்று சொன்னதாயிற்று.

ஸ்ரீ பாஷ்யத்தில் கீழ்க்கூறப்பட்டுள்ள பங்க்திக்கு அடுத்து பின்வருமாறு ஒருவாக்யம் இருக்கின்றது. "𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌮𑌤𑌿𑌮𑌨𑍍𑌤𑌰𑍇𑌣𑌾𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌨𑍋𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇" [பரமாத்மாவின் அநுமதி இராமல் ஜீவனுக்கு ப்ரவ்ருத்தி ஏற்பட மாட்டாதன்றோ?] இதற்கு வ்யாக்யாநம் செய்கையில், இந்த வாக்யம் உத்தர ப்ரவ்ருத்தி விஷயம் என்று ஸ்ரீ ச்ருத ப்ரகாசிகாசார்யர் விவரித்திருக்கிறார். அதாவது, ஸ்ரீ ச்ருதப்ரகாசிகாசார்யருடைய வ்யாக்யாநப்படி, 'ஜீவாத்மாவின் ப்ரதம ப்ரவ்ருத்திக்குப் பரமாத்மாவின் அநுமதி வேண்டுவதில்லை; உத்தர ப்ரவ்ருத்திகளுக்கு அது அவச்யம் அபேக்ஷிதம்' என்பதே ஸ்ரீ பாஷ்ய காரருடைய திருவுள்ளம் என்று ஏற்படுகின்றது.

இதையும் ச்ருதிகளில் பரமாத்மாவுக்கு ஸாக்ஷித்வம் சொல்லப்பட்டிருப்பதையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு ஸ்ரீ ச்ருத ப்ரகாசிகாசார்யர், ஜீவனுடைய முதல் ப்ரவ்ருத்தியில் பரமாத்மாவுக்கு உபேக்ஷகத்வமென்றும் மேற்கொண்ட ப்ரவ்ருத்திகளில் அவனுக்கு அனுமந்த்ருத்வமென்றும் ஒரு வ்யவஸ்தையை ஏற்படுத்தி, அதற்கு ஒத்து அநுமந்த்ருத்வம் என்னும் சப்தத்திற்கு ஏற்கெனவே ஒரு க்ரியையில் ப்ரவர்த்தித்திருப்பவனை மேற்கொண்ட உத்யோகங்களில் ப்ரவர்த்திப்பிப்பதே பொருள் என்றும் விவரித்திருக்கிறார்.

இவ்வாறு விவரித்துவிட்டு, தமது விவரணத்திற்குப் பூர்வ பக்ஷமாகச் சில சங்கைகளைச் சங்கித்துக்கொண்டு அவைகளுக்கு ஸமாதானத்தையும் ஸ்ரீ ச்ருதப்ரகாசிகாசார்யர் அந்த ஸ்தலத்திலேயே கூறியிருக்கிறார். அந்தச் சங்கைகளுள் பின்வருமது ஒன்று.

'ஜீவனுக்கு முதல் முதலில் இச்சையும் ப்ரயத்நமும் உத்பத்தியடைவதில் பரமாத்மாவுக்குக் காரணத்வமுண்டா? இல்லையா? இல்லையென்றால் பரமாத்மா எல்லாவற்றுக்கும் காரணம் என்பதற்கு பங்கம் ப்ரஸங்கிக்கும். நிற்க, ஜீவனுக்கு இச்சையும் ப்ரயத்நமும் உத்பத்தியடைவதெல்லாம் பூர்வ கர்ம பல ரூபமாகிறபடியால், அந்த இச்சா ப்ரயத்நங்களுக்குப் பரமாத்மா காரணமாகாவிட்டால் அவனுக்கு ஸர்வ கர்ம பல ப்ரதத்வமுண்டென்று சொல்வதும் உபபந்நமாகமாட்டாது. ஆகையால், ஜீவனுடைய முதல் இச்சை ப்ரயத்நங்களிலும் பரமாத்மாவுக்குக் காரணத்வத்தை அங்கீகரித்தல் வேண்டும். இதை அங்கீகரித்தால், ஒரு தசையில் பரமாத்மா உபேக்ஷகனாக இருக்கிறான் மற்றொரு தசையில் அநுமந்தாவாக இருக்கிறான் என்று சொல்லப்படும் பேதமெல்லாம் விலகிவிடும். நிற்க, பரமாத்மா ஜீவனை ப்ரவர்த்திப்பிப்பதானது அவனைப் பிடித்துத் தள்ளி ப்ரவர்த்திப்பிப்பது போலவன்று; கேவலம் அவனுக்கு இச்சையை உண்டுபண்ணி அது வழியாக ப்ரவர்த்திப்பிப்பதேயாகும். ஜீவனுடைய முதல் ப்ரவ்ருத்தியில் பரமாத்மா அம்மாதிரியான இச்சையை உண்டு பண்ணுகிறானென்றால், அப்பொழுது அவனுக்கு உபேக்ஷகத்வம் சொல்வது எப்படி உபபந்நமாகும்?' இந்தச் சங்கைக்கு அவர் சொல்லும் ஸமாதாநமாவது :—

'பரமாத்மா ஜீவனுக்கு உபகரிப்பதானது, ஸாதாரணோபகாரமென்றும் விசேஷோபகாரமென்றும் இருவகைப்படும். பரமாத்மா ஆதியில் ஜீவனை ஸ்ருஷ்டிக்குங் காலத்தில் அவனுக்குக் கரண களேபரங்களைக் கொடுத்து உபகரிக்கிறானென்பது அவன் செய்யும் ஸாதாரணோபகாரம். பிந்தியும் அந்தக் கரண களேபராதிகளுள் தான் வ்யாபித்து அவைகள் தரித்து நிற்கும்படியாகவும் அவைகள் தம் தம் வ்யாபாரங்களில் ஸமர்த்தங்களாக இருக்கும்படியாகவும் செய்யும் உபகாரமெல்லாம் அவனுக்கு எப்பொழுதும் உண்டு. இப்படி உபகரிப்பதால் ஜீவனுடைய ப்ரதம இச்சை முதலியவைகளிலும் அவனுக்குக் காரணத்வமுண்டு. ஆகையால்

ஸர்வகாரணத்வ பங்க ப்ரஸக்திக்கு இடமில்லை. ஜந்ம காலத்தில் அவனால் கொடுக்கப்படும் கரண களேபராதிகளும் அவரவர்க ளுடையப் பூர்வ கர்மாநுகுணமாகவே கொடுக்கப்படுகிறபடியால், ஸர்வ பல ப்ரதத்வ ஹாநியும் அவனுக்கு நேரமாட்டாது. இம் மாதிரியான ஸாதாரணோபகாரத்தை மாத்ரம் செய்துகொண்டு, வேறு அக்காலத்தில் இச்சை முதலியவைகளை ஜநிப்பிப்பதான விசேஷோபகார மொன்றையும் செய்யாமலிருப்பதால், அப் பொழுது அவன் உதாஸீநனுக இருக்கிறுன் என்று சொல்லப் படுகிறுனென்று சொல்வது ஸங்கதமே.!' இதுதான் அவர் அநுக்ர ஹித்திருக்கும் ஸமாதாநம். அதாவது—இச்சாஜநகத்வரூபமான ப்ரேரகத்வம் ப்ரதம ப்ரவ்ருத்தி தசையில் பரமாத்மாவுக்கு இல்லை; ஸாதாரணோபகாரம் செய்கிறுனென்னும் ஆகாரம் உளதாகையால் அதுவழியாக அவனுக்கு ஸர்வகாரணத்வமும் ஸர்வகர்ம பலப்ர தத்வமும் நிலைபெற்றே நிற்கின்றனவென்று சொன்னதாயிற்று.

ஸ்ரீதேசிகன், கீழ்க்கூறியபடி பரமாத்மாவுக்கு ஒரு தசை யில் கேவல உபேக்ஷகத்வம் மற்றெரு தசையில் அநுமந்த்ருத்வம் என்று இரண்டு தசாபேதங்களைத் திருவுள்ளம் பற்றியிருப்பதாகத் தெரியவில்லை. துல்ய பலங்களான ச்ருதி வாக்யங்களாற் சொல்லப் படும் ஸாக்ஷித்வமும் (அதாவது உபேக்ஷகத்வம்) அநுமந்த்ருத்வ மும் எல்லாத் தசையிலும் பகவானுக்கு உண்டு என்பதே ஸ்ரீதேசிக னுடைய திருவுள்ளமென்று தோன்றுகின்றது. 'ஒரே காலத்தில் பரஸ்பர விருத்த தர்மங்களாகிற ஸாக்ஷித்வமும் அநுமந்த்ருத்வமும் எப்படி ஸங்கதங்களாகும்?' என்றால், எந்த ச்ருதியானது ஸாக்ஷித் வத்தைச் சொல்லுகிறதோ அது போன்ற மற்றெரு ச்ருதியே அநுமந்த்ருத்வத்தையும் சொல்லுகிறபடியால், இரண்டும் அவனி டத்தில் எப்பொழுதும் உண்டு என்று சொல்லக்கூடும் என்பதே அவருடைய திருவுள்ளமென்று தெரிகிறது. ஸ்ரீ ஸாராவளியில்,

"ஸாக்ஷித்வாநுமந்த்ருத்வே துல்யமாநமிதே ஹ்யுபே"

[ஸாக்ஷித்வமும் அநுமந்த்ருத்வமும் துல்யப்ரமாண ப்ரமிதமாகை யால் ஒன்று மற்றென்றைப் பாதிக்கமாட்டாது] என்று அநுக்ர ஹித்திருக்கிறார். ஸ்வதந்த்ரனை கர்த்தாவாக இருக்கும் ஈஶ்வர னுக்குக் காரயித்ருத்வம் முதலான தர்மாந்தரங்களுடைய ஸமவாயம் உபபந்நமாவதுபோல உதாஸீநத்வாநுமந்த்ருத்வங்களும் உபபந்ந மாகக்கூடும் என்பதே ஸ்வாமியின் ஹ்ருதயம்போலத் தோன்றுகி றது. ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரத்திலும், சரம ச்லோகாதிகாரத்தில்,

"ஒன்றிலே ப்ரவ்ருத்தனை சேதநனை விலக்காத வளவில் உபேக்ஷகன். அப்போது இசைந்திருக்கையாலே அநுமந்தா"

என்னும் திவ்யஸூக்தி அநுக்ரஹிக்கப்பட்டிருக்கிறது. 'அப் போது' என்னும் சப்தமானது உபேக்ஷகத்வம் இருக்குங்காலத் திலேயே அநுமந்த்ருத்வமும் இருக்கின்றது என்பதை ஸூசிப்பிக் கின்றதன்றே?

நிற்க, ஸகல தசைகளிலும் பரமாத்மாவுக்கு ப்ரேரகத்வத்தை ஒத்துக்கொள்ளாவிட்டால், அவனுடைய ஸர்வ காரணத்வத்திற்கும் ஸர்வ பலப்ரதத்வத்திற்கும் ஹாநி ப்ரஸங்கித்தே தீரும் என்னும் சங்கை அவருடைய திருவுள்ளத்தில் இருக்கிறதென்றே தெரிகின்றது. ஸ்ரீ ஸாராவளியில், 'பரமாத்மா ஸர்வ பலங்களையும் கொடுக்கிறவன் என்பதை அங்கீகரித்துக்கொண்டு, சிலர், ஒரு தசாவிசேஷத்தில் அவனுக்கு ப்ரேரகத்வம் இல்லையென்று சொல்லுகிறார்களே! இது எப்படி யுக்தமாகும்? ஒரு புண்யத்திலோ அபுண்யத்திலோ ஜீவனால் செய்யப்படும் ப்ரவ்ருத்தியெல்லாம் ப்ராசீந கர்ம பலமாகவே ஸம்பவிக்கின்றதன்றோ? ஸகல பலங்களும் பரமாத்மாவால் கொடுக்கப்பட்டே நமக்கு வருகிறபடியால், ப்ரதம ப்ரவ்ருத்தி ஜநகத்வமும் அவனுக்கு உண்டென்று அங்கீகரிக்கப்படவேண்டும். அதை அங்கீகரியாவிட்டால், அவனுக்கு பல ப்ரதத்வ ஹாநி ப்ரஸங்கிக்கும்' என்னும் பொருளுள்ள ச்லோகமொன்றை அநுக்ரஹித்திருக்கிறார்.

"கதமா தெவஃ ஸமாஸாஸதா காரணஹூதஃ வெூாகஷெூதுயாக்கும்
ஸவமுரூாதுாஜிகொவாஸஹவதி ந ஸமும் கஜுணஃ வாவவயமா"

இந்த ச்லோகத்தில், ஸ்ரீச்ருதப்ரகாசாசார்யரால் எந்தச் சங்கை செய்யப்பட்டதோ அதுவே அநுவதிக்கப்படுகின்றது என்பது நன்கு விளங்குகின்றது. ஆனால், 'ப்ரதம ப்ரவ்ருத்தி தசையில் ப்ரேரகத்வம் இல்லையென்று சொன்னாலன்றோ அந்தச் சங்கைக்கு உத்திதி ஏற்படும்? அந்தத் தசையிலும் அவனுக்கு ப்ரவ்ருத்தி ஜநகத்வ ரூபமான ப்ரேரகத்வத்தை நாம் அங்கீகரிக்கிறபடியால், அந்தச்சங்கைக்கு அவகாசமே இல்லை' என்னும் ஸமாதாநமே ஸ்ரீ தேசிகனால் சொல்லப்படுகிறதே தவிர்த்து, ஸ்ரீச்ருதப்ரகாசிகாசார்யர் சொல்லும் ப்ரகாரம் 'அந்தத் தசையில் ப்ரேரகத்வம் இல்லை. ஆனால் அதன் அபாவத்தால் ஒரு தோஷமும் ப்ரஸங்கிக்கமாட்டாது' என்பது போன்ற ஸமாதாநம் சொல்லப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இந்த ச்லோகத்தின் உத்தரார்த்தத்தில், 'எல்லாதசையிலும் ப்ரேரகத்வமுண்டு என்னும் மதமே ஸ்ரீ பாஷ்யகாருடைய திவ்ய ஸூக்திகளிலிருந்து விளங்கும்' என்று வற்புறுத்துகிறார். ஏதாவது ஒரு தசையில் ஏதாவது ஒரு ப்ரகாரமாக பரமாத்மாவுக்கு ப்ரேரகத்வாபாவத்தை ஒத்துக்கொண்டால், அந்தத் தசையில் அந்த ஆகாரப்ரயுக்தமான காரணத்வஹாநி நிச்சயம் ப்ரஸங்கிக்குமாகையால், பரமாத்மாவுக்கு ஸர்வகாரணத்வம் பங்கமாகிவிடுமன்றோ?

ஸ்ரீ தேசிகனுடைய மதமானது, ப்ரவ்ருத்தி ப்ரவாஹம் அநாதியாக இருக்கிறபடியால் ப்ரதம ப்ரவ்ருத்தி என்று ஒரு தசையும் இல்லை என்பதாக இருக்கலாமோ வென்று ஊஹிக்க இடமிருப்பது போலத் தெரிகின்றது. கதூ ஊஹாஜஃ வூஜாணமு.

## சந்தா செலுத்தினவர்களின் பெயர்

### 1—4—'42 to 30—4—'42

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

| | | | | | Rs. |
|---|---|---|---|---|---|
| 1. | Sri P. S. Raghava Iyengar, | Tinnevelly | ... | ... | 3 |
| 2. | ,, A. Narasimhachari, | P. T. Madras | ... | ... | 3 |
| 3. | ,, H. R. Rangaswami Iyengar, | Bhadravathi | ... | ... | 3 |
| 4. | ,, V. K. Parthasarathi, | Triplicane | ... | ... | 3 |
| 5. | ,, T. K. Padmanabha Iyengar, | Shencottah | ... | ... | 3 |
| 6. | ,, K. S. Srinivasa Raghavachari, | Bombay | ... | ... | 3 |
| 7. | ,, S. Varadachari, | New Delhi | ... | ... | 3 |
| 8. | ,, C. Rajagopalachari, | Coimbatore | ... | ... | 3 |
| 9. | ,, K. Venkatachari, | Erode | ... | ... | 3 |
| 10. | ,, S. Venkatachari, | Pothanur | ... | ... | 3 |
| 11. | ,, C. R. Srinivasa Iyengar, | Kaveripauk | ... | ... | 3 |
| 12. | ,, T. A. Rajagopala Iyengar, | Nungambakkam | ... | ... | 2 |
| 13. | ,, Vedam Venkatachariar, | Tirukurungudy | ... | ... | 1 |
| 14. | ,, K. S. Ramanujachariar, | Kaveripauk | ... | ... | 3 |
| 15 | ,, K. V. Srinivasa Iyengar, | Marudur | ... | ... | 3 |
| 16. | ,, M. K. Ramaswamy Iyengar, | ,, | ... | ... | 3 |

[இந்த ஸஞ்சிகையுடன் ஐந்து ஸஞ்சிகைகள் வெளியாகி இருக்கின்றன. பத்ரிகையைப் பெற்றுக் கொள்பவரெல்லாரும் க்ருபைசெய்து வர்ஷச் சந்தாவை விளம்பமிராமல் அனுப்பினல் ஸௌகர்யமாக இருக்கும்.]

ஸ்ரீ:

# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

## சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபனம்

1. இந்தப் பத்திரிகையின் வருஷச் சந்தா ரூபா 3. இப் பத்ரிகையை அபேக்ஷிப்பவர்கள் இந்த ஆபீஸ் விலாஸத்திற்கு எழுதிப் பத்ரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

2. வருஷச் சந்தாவை முன் பணமாகக் கீழ்க்கண்டுள்ள விலாஸத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாதாரர்கள், பத்ரிகைக்காக மனுச் செய்துகொள்ளும் காலத்தில், தங்களுடைய விலாஸத்தைப் பூர்ணமாக எழுதி அனுப்புதல் வேண்டும். பிறகு விலாஸம் எப்பொழுதாவது மாறினல், அந்த மாறுதலையும் உடனே பத்ரிகை ஆபீஸுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

3. சந்தாதாரர்கள் ஆபீஸுக்கு எழுதும் கடிதங்கள் எல்லாவற்றிலும், தங்கள் பெயருடன் தங்கள் ரிஜிஸ்தர் நம்பரையும் எழுத ப்ரார்த்திக்கிறோம். அந்த நம்பர் அச்சிட்ட விலாஸத்தில் காணப்படும்.

Regd. No. M. 4437

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

இது ஸ்ரீ அஹோபில மடத்தால் ப்ரதி மாஸம் ப்ரசுரம் செய்யப்படும் பத்ரிகை. இதன் நோக்கங்களாவன :—

1. ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஆஸ்திக்யத்தை வ்ருத்தி செய்வது.

2. ஸ்ரீ விசிஷ்டாத்வைத மதத்தின் விசேஷ தத்வங்களைப் பற்றி தத்வ வித்துக்களின் ஸஹாயத்தைக்கொண்டு வ்யாஸங்களை வெளிப்படுத்துவது.

3. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் நடைபெறும் நித்யோத்ஸவாதிகளைப்பற்றியும் மற்றும் ஸ்ரீ ஸந்நிதி ஸம்பந்தங்களாக அப்பொழுதுக் கப்பொழுது நடைபெறும் வ்ருத்தாந்தங்களைப் பற்றியும் குறிப்புக்களை ஸங்க்ரஹிப்பது.

4. வைதிகாசாரம் வேதோக்த மதம் இவைகளைக் காப்பாற்றுவதற்கு வேறு உபாயங்களைத் தேடுவது.

5. இவைபோன்ற மற்றை கார்யங்களைச் செய்வது.

விளம்பரம் :— இந்தப் பத்ரிகையில் விளம்பரங்களுக்குப் பின் கூறப்பட்டுள்ள வீதம் சார்ஜு வஸூல் செய்யப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (1) | முழுப்பக்கம் ஒருதடவைக்கு | | ரூ. | 4—0—0 |
| (2) | ஷை | 3 மாஸங்களுக்கு | ,, | 10—0—0 |
| (3) | ஷை | 6 ,, | ,, | 18—0—0 |
| (4) | ஷை | 12 ,, | ,, | 34—0—0 |

பாதிப் பக்கத்திற்குப் பாதி சார்ஜும், கால் பக்கத்திற்கும் அதற்குக் குறைந்த பாகத்திற்கும் கால் சார்ஜும் செய்யப்படும். சார்ஜு முழுவதையும் முன்பணமாகவே செலுத்த வேண்டும்.

இந்தப் பத்ரிகைக்குச் சந்தாதாரர்கள் ஆயிரம் பெயர்கள் இருக்கிறார்கள்.

: ஆபீஸ் விலாஸம் :

5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், மதராஸ்.

Printed by K. Sadagopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramasami Street, Tyagarayanagar, Madras.